விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 14 சனிக்கிழமை (28.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 160

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வடக்கு-கிழக்கு மக்களுக்கான ஜனநாயக உரிமையை வழங்க ஒரு போதும் தயங்கவில்லை!



உயிர்நீத்த படையினருக்கு அஞ்சலி செலுத்தும் ஜனாதிபதி...

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய ஒருமைப்பாட்டுடன் வடக்கு-கிழக்கு வாழ் மக்களுக்கான ஜனநாயக உரிமையினை வழங்குவதற்கு நாங்கள் ஒருபோதும் தயங்க வில்லை. இருப்பினும் பிரிவினைவாதக் குழுக்கள் கேட்பதைக் கொடுக்க நாங்கள் தயாராக இல்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி வித்தார்.

சர்வதேசத்தைப் பயன்படுத்தி இந்தப் பிரிவினைவாதக் குழுக்கள் முன்னெடுக்கும் முயற்சிகள் சாத்தியமாகப் போவதில்லை. உள்வீட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வோம். அதில் வெளியார் தலை யீட்டுக்கு ஒருபோதும் இடமில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித் தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பீரிஸை சந்திக்க பின்னடிக்கும் அமைச்சர்கள்

(ஜகர்த்தா)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்துப் பேச பலர் பின்னடிப்பதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

அணிசேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டுக்காக பாலித்தீவுக்குச் சென்றுள்ள ஜீ.எல்.பீரிஸ், அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவரும் பல்வேறு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களையும் தனியாகச் சந்தித்துப் பேச திட்டமிட்டிருந் தார்.

ஆனால் இந்தோனேசியாவில் கடந்த இரண்டு நாட்களாக தங்கியிருந்த அவரால் நேற்று முன்தினம் வரை எகிப்து வெளிவிவ கார அமைச்சர் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோ. நாடாளுமன்றத்தில் தமிழர்களின் தீர்மானம்

(பிரசல்ஸ்)

முதல் முறையாக இலங்கை நிலை குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தமிழர்கள் தீர்மானம் நிறைவேற்றவுள்ளனர்.

குற்றம் இழைக்கப்பட்டோர் தண்டிக்கப் பட்டனரா என்ற தலைப்பில் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றும் மாநாடொன்றை முதல் முறையாக தமிழர்கள் நடத்தவுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற வளாகத்தில் யூன் முதலாம் திகதி இது நடை பெறவுள்ளது. போர் முடிபுற்று இரண்டு வரு டங்களாகியும் குற்றமிழைத்தவர்கள் தண் டிக்கப்படவில்லை என்பதனை தமிழர் தரப்பு தமது தீர்மானத் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை வரை ரயில் சேவை

(வவுனியா)

21 வருடங்களின் பின்னர் வட பகுதிக்கான ரயில் பாதையில் ஓமந்தை வரையில் ரயில் சேவை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் சேவை தற்போது வவுனியா நகரின் புறநகர்ப்பகுதியிலுள்ள தாண்டிக்குளம் வரையில் நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

வவுனியாவிலிருந்து வடக்காக சுமார் 14 கிலோ மீற்றர் (20ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கான வெட்டுப்புள்ளி.

## அழுத்தங்களுக்கு உள்ளாகும் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன்

(நியூயோர்க்)

சர்வதேச ரீதியான யுத்தக் குற்றச்சாட்டுக் கள் தொடர்பிலான வழக்குகளில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன், தொடர்ந்தும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாக இன்னர் சிட்டி பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அவர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கையில் புறக்கணிக்கப்பட்டது.

அத்துடன் அது தொடர்பில் பல்வேறு அழுத்தங்களை பான் கீ மூன் சந்தித்து வரு கிறார். இதற்கிடையில் கிரிகிஸ்தான் நாட்டில் கடந்த வருடம் இடம்பெற்ற யுத்தத்தில் குற்றங் கள் இடம்பெற்றதாக கூறி பிரபல எழுத்தாளர் கிமோ கல்ஜுனேனை அறிக்கை ஒன்றை வெளியிட்டதைத் தொடர்ந்து அவர் அந்த நாட்டினுள் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பிலான தீர்மானம் ஒன்று கிரிகிஸ்தான் நீதிமன்றில் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் மார்டின் (20ஆம் பக்கம் பார்க்க)



**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# நாளை மின்தடை

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின் மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என யாழ்.மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ச)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# ஜனநாயக உரிமையை வழங்க...

காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்ற யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பழைய காயங்களை பெருப்பித்து மக்கள் மத்தியில் கலவரத்தை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சித்து வருகின்றன. அதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை என்பதை அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கத்துடன் இணைந்து நாட்டையும் நாட்டு மக்களையும் அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்வதற்கான முயற்சியில் இந்தக் கட்சிகள் ஈடுபடவேண்டுமே தவிர அரசாங்கத்துக்கு எதிரான சதி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு நாடு தற்போது ஐக்கியப் படுத்தப்பட்ட நிலையில் அனைத்து இன மக்களும் சமமாக வாழ வழியமைத்த வெற்றியாகவே இந்த யுத்த வெற்றி விழா கருதப்படுகிறது. யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்கள் மீட்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் அரசியல் அமைப்புக்குள் மனித உரிமைகளை உள்ளடக்கி சர்வதேசத் திடம் சமர்ப்பிப்பதன் மூலம் நாட்டினதும் மக்களினதும் மனித உரிமையை பாதுகாக்க முடியாது. மக்கள் சுதந்திரமாகவும் தங்களது ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தும் வாழக்கூடியதொரு சூழ்நிலையை உருவாக்குவதன் மூலமே மனித உரிமைகளை பாதுகாக்க முடியும்.

எமது மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கையில் நாம் எப்போதும் ஈடுபட்டு வருகிறோம். யுத்தத்தால் இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட பிரதேசங்களில் வெறுமனே மீள்குடியேற்றத்திற்கு உட்படுத்தவில்லை. தலையணை, படுக்கை, நுளம்புத்திரி உள்ளிட்ட சகலவற்றையும் வழங்கியே அவர்களை மீள்குடியேற்றினோம்.

அபிவிருத்தியின் சூரிய உதயம் வடக்கு, கிழக்கில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பயங்கரவாதிகள் எமது மக்களின் சொத்துக்களையே அழித்தனர். அவற்றை நாம் மீளப் பெற்றுக் கொடுத்து வருகிறோம்.

வெளிநாடுகளில் வாழும் பழைய பயங்கரவாதிகள் மீண்டும் நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுச் செல்லும் அவர்கள், அந் நாடுகளிலுள்ள ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தி இலங்கைக்கு எதிரான சதிவேலைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இது அனைவரும் அறிந்த உண்மையே.

இதேவேளை ;உண்மையின் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதன் மூலமே ஒரு நாட்டில் குழப்பம் ஏற்படுத் தப்படுகிறது. அந்த நிலைமையே எமது நாட்டிலும் தற்போது ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

அதனாலேயே யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த எமது போர் வீரர்களுக்கு எதிராக தற்போது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒரு கையில் துப்பாக்கியும் மறு முனையில் மனிதாபிமானத்தையும் வைத்துக் கொண்டே எமது படையினர் யுத்தகளத்தில் மனிதாபி மான நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போது அவர்கள் ஜாதி, மதம் என்பவற்றைப் பார்க்கவில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கத் தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டதை அடுத்து அவரது பெற்றோரை எமது படையினரே கவனித்து வந்தனர்.

அவ்வியக்கத்தைச் சேர்ந்த மேலும் பல முக்கியஸ்தர்களின் குடும்பங்களை நாம் இன்றும் எமது பாதுகாப்பில் வைத்து கவனித்து வருகிறோம்.

அத்துடன், பயங்கரவாதிகளுக்கான உணவு, மருந்து மற்றும் அனைத்துத் தேவைகளையும் வழங்கிக் கொண்டு அவர்களால் தொடுக்கப்படும் தாக்குதல்களை எதிர்கொண்டு யுத்தம் செய்த நாடு என்ற பெருமை இலங்கைக்கு மாத்திரமே உண்டு.

இவ்வாறானதொரு நிலையில், எமது படையினருக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையானது மிகவும் பாரதூரமானதாகும்.

படையினரே! யுத்த காலத்தில் நாம் உங்களுடன் இருந்தோம். எமது இதயங்களில் நீங்கள் குடிகொண்டிருக்கிறீர்கள். இந்நிலையில் உங்களை நாம் ஒருபோதும் காட்டிக் கொடுக்கப் போவதில்லை. உங்களது ஒழுக்கம், கௌரவம் மற்றும் தனித்துவத்தை நாம் எப்போதும் பாதுகாப்போம்.

எமது நாட்டை அழிப்பதற்காக நாம் எமது படையினரைப் பயன்படுத்தவில்லை. நாட்டையும் நாட்டு மக்களையும் மீட்டு, நாட்டை ஐக்கியப் படுத்துவற்காகவே அவர்கள் பயன்படுத்தி கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம்.

அத்துடன் தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் படையினர் தங்களது அயராத ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நாம் தகர்ப்போம். எமது மக்கள் அவற்றைத் தகர்ப்பார்கள்.

நாட்டு மக்களின் அனுமதியின்றி இங்கு எதுவும் நடக்காது. எமது உள்வீட்டுப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் எமது மக்கள் எமக்கு உதவுவர். அதில் வெளியார் தலையீட்டுக்கு ஒருபோதும் இடமில்லை. சர்வதேச நாடுகளைப் போன்று நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டை மீறும் சம்பவங்கள் இங்கு இல்லை.

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேச மக்களும் யுத்தமின்றிய நாட்டில் சுதந்திரக் காற்றை சுவாசித்து இயல்பு வாழ்க்கையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றனர். மக்களின் சந்தோசமே எமக்கு முக்கியம் என்றார். (ச-5)

# விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நேர்முகத் தேர்வு பிற்போடப்பட்டது

விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனத்திற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.

மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சை இம் மாதம் 30ஆம் திகதி தொடக்கம் யூன் மாதம் 10 ஆம் திகதிவரை யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள மாவட்டக் காரியாலயத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் மேற்படி நேர்முகத் தேர்வு பிற்போடப்பட்டுள்ளதாகவும், நேர்முகத் தேர்வுக்குரிய புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**விற்பனையாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் புடவை நிறுவனத்திற்கு விற் பனையாளர் பெண்கள் தேவை.
தொடர்பு:0772850753
(C-3309)

**வாடகைக்கு**

பலாலி வீதி, கந்தர்மடம் அருகில் புதிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகம், NGO வுக்கு உகந்தது.
தொடர்பு:0772850753
(C-3309)

**விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனத்திற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சை இம் மாதம் 2011.05.30ஆம் திகதி தொடக்கம் 2011.06.10 ஆம் திகதி வரை யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள மாவட்டக் காரியாலயத்தில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணங்களால் மேற்படி நேர்முகத் தேர்வு பிற்போடப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வுக்குரிய புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

ம.பற்றிக் டிறஞ்சன்
உதவி ஆணையாளர்
கமநல அபிவிருத்தி திணைக்களம்
யாழ்ப்பாண மாவட்டம்.
(சி-3310)



# பாடசாலைக் கல்வியை

அண்மையில் பூர்த்தி செய்த

## மாணவர்களுக்கு

ஹற்றன் நஷனல் வங்கி

## யாழ் குடாநாட்டில்

நடாத்தும் ஆரம்ப வங்கியியல் மற்றும் வணிகத்துறைச் சான்றிதழுக்கான கற்கை நெறி

| | |
|---|---|
| அனுமதிக்கான தகைமைகள் - | • 22 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்<br>• க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 5சிறப்புச் சித்திகளுடனும் கணிதபாடம், ஆங்கிலமொழி அல்லது வர்த்தகமும் கணக்கியலும் பாடங்களில் ஏதேனுமொரு பாடத்தில் விசேட சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்<br>• க.பொ.த. உயர்தரத்தில் ஒருபாடத்தில் சிறப்புச்சித்தியும், இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும்பெற்றிருத்தல் வேண்டும் |
| பாடநெறியில் உள்ளடக்கப்படும் பாடங்கள் - | • வியாபாரமும் வங்கியியலும்<br>• கணக்கியல்<br>• பொருளியல்<br>• முகாமைத்துவமும் கட்டமைப்புகளும் |
| பாடநெறி கற்பிக்கப்படும் மொழி - | ஆங்கிலம் |
| காலம் - | 60 மணித்தியாலங்கள் |
| இடம் - | HNB சுன்னாக வாடிக்கையாளர் நிலையம் |

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பிப்பதற்கும் http://www.hnb.net என்னும் இணையத்தளத்தில் "Careers at HNB" பகுதியினை பார்க்கவும். அனைத்து விண்ணப்பங்களும் மேற்குறிப்பிட்ட இணையத்தளத்தினூடாக 10.06.2011 முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

HNB

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி


# பிணத்தைப் புதைக்கும் வண்டு!


செக்ஸ்டன் எனப்படும் ஒரு வண்டு, கறுப்பும் ஒரேஞ்சும் கலந்த நிறத்தில் இருக்கும். ஏதாவது ஒரு சிறு உயிரினம் இறந்துவிட்டால், வாசனையாலே தெரிந்து கொண்டு அதனிடம் வந்து விடுகிறது இந்த வண்டு. அதனடியில் மல்லாந்து படுத்து பொருத்தமான இடத்துக்கு அதை நகர்த்திச் செல்கிறது.

பின்னர் ஆணும், பெண்ணும் சேர்ந்து சிறு குழி தோண்டி, அதற்குள் இறந்த உயி ரினத்தின் உடலைத் தள்ளு கின்றன. அதன் மேலே இலையைப் பரப்பி, பெண் வண்டு முட்டை யிடுகிறது. உரிய நாளில் முட்டை பொரித்து குஞ்சு வெளிப்படும். அழுகிய பிணத்தைக் தின்று குஞ்சு வளர்கிறது.



வளர்ந்ததும் அதுவும் பிணத்தைப் புதைக்கும் வேலையைச் செய்யத் தொடங்கி விடுகிறது.

# டொல்பினின் அதிசயங்கள்!



மீன் இனத்தைச் சேர்ந்த டொல்பினைப் பற்றி அறிந்திருப்பீர்கள். இது தண்ணீருக்கு மேல் எழும்பி மனிதர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டும். டொல்பினுக்கு குரல்வளை கிடையாது. ஆனாலும் காற்றை ஊதி, 32 வெவ்வேறு விதமான ஒலிகளை எழுப்புகிறது.

இதுவும் வௌவாலைப் போல ஒலி அதிர்வுகளைக் கொண்டு பயணம் செய்கிறது. தண்ணீருக்குள் 15 மைல்களுக்கு அப்பால் இருந்து எழும் ஒலியையும் கேட்கக்கூடிய அளவுக்குக் கேட்கும் திறன் கொண்டது.

டொல்பின்கள் கூட்டமாகவே வாழும். கஷ்டம் நேரும்போது தம் கூட்டத்தை விட்டுக் கொடுக்காது. ஒரு டொல்பினுக்கு காயம் ஏற்பட்டுவிட்டால் அதை தமது மூக்கில் தாங்கி, நல்ல காற்றைச் சுவாசிப்பதற்காக நீர் மட்டத்துக்குக் கொண்டு வரும்.

நீரில் வாழ்ந்தபோது டொல்பின்கள் குட்டி போட்டுப் பாலூட் டுபவை. குட்டி பிறந்ததும் தாய் அதைத் தன் மூக்கில் தாங்கி தண் ணீருக்கு வெளியே கொண்டு வரும். அப்போதுதான் குட்டியால் சுவாசிக்க முடியும். இப் பழக்கம் இயல்பாகவே அதனிடம் அமைந்துவிட்டது.

மனிதர்கள் இடும் சில கட்டளைகளை டொல்பின்கள் புரிந்து கொள்கின்றன. இவற்றைப் பேசவைக்க முடியுமா என்று தற்போது முயற்சி செய்து வருகிறார்கள்.


micro trend

தற்போது மைக்ரோவிடமிருந்து உங்களுக்கு

நன்மைகள் பல

அதி வலு

தாரால இடவசதி

சொகுசானது



- ★ 1050CC சிலிண்டர் 4, MPI பெற்றோல் என்ஜின்
- ★ AM/FM வானொலியுடன் CD பிளேயர்
- ★ பவர் ஸ்டீரிங் தொகுதி
- ★ சென்றல் லொக்கிங் தொகுதி
- ★ பவர் சுடர்ஸ்
- ★ 5 மெனுவல் கியருடன் கூடிய தொகுதி
- ★ அலோவீல் (13 அங்குலம்)

ரூ.1,085,000/=

Micro Holdings (Pte,) Limited

கொழும்பு காட்சியறை: 34, Shadygrove Avenue, Castle Street, Colombo 08.

கண்டி காட்சியறை மற்றும் பிராந்திய சேவை நிலையம்: 53/1, Pelathawana Rd, Nawayalathenna, Katugastota. Mobile:0772366107

மாத்தறை காட்சியறை: 412, Anagarika Dharmapala Mw, Pamburana, Matara. Mobile:0777226732 / 0777426823

| தொலைபேசி | பகஸ | துரித அழைப்பு | |
|---|---|---|---|
| 011 2695056/8 | 011 2692786 | 0777 480 677 | 0773 667 658 |
| 011 2981565/7 | 011 2935839 | 0777 715 122 | 0773 667 686 |
| 081 5747013 | 081 5747013 | 0773 667 698 | 0773 523 307 |
| 041 2235551 | 041 2235552 | 0777 715 259 | 0773 523 308 |

MICRO HOLDINGS

E-mail : sales@microholdings.lk Web site : www.microcars.lk

# ஐ.நா.மனித உரிமை பேரவையில்

# இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பாக தெளிவுபடுத்துவதற்கு திட்டம்

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையை தெளிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் 17 ஆவது கூட்டத் தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளதாகத் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பில் விளக்கமளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.


குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டங்களின் தேர்ச்சி தொடர்பாக இலங்கை பிரதிநிதிகள் மனித உரிமைப் பேரவையை தெளிவுபடுத்தவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இராஜதந்திர மட்டத்திலான அதிகாரிகள் குழுவொன்று பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமைப் பேரவையின் 17ஆவது கூட்டத் தொடரில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அடுத்த மாதம் 17 ஆம் திகதி வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# பல்கலை. மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி திட்டத்திற்கு ஆதரவளிக்க முடியாது

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்குவது குறித்து முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆலோசனை நடத்தியதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த தலைமைத்துவ பயிற்சினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை இனங்கண்டு கொண்டதனால் திட்டம் கைவிடப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் அமரர் நிஸ்ஸங்க விஜேரட்னவிற்காக நடத்தப்பட்ட இரங்கல் அமர்வுகளில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்லைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்குவதன் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை அமரர் விஜேரட்ன ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு விளக்கியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் பயிற்சி திட்டத்திற்கு ஆதரவளிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இறக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான இரங்கல் அமர்வுகள் காலம் தாழ்த்தப்படக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு அபராதம் விதிப்பு

(கரவெட்டி)

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து கிளிநொச்சி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் கசிப்பு விற்பனை, கசிப்பு உற்பத்தி செய்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபருக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸார் கடந்த 25 ஆம் திகதி புதன் கிழமை வழக்குத் தாக்கல் செய்தனர்.

குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு நீதிபதி பெருமாள் சிவகுமார் மேற்படி அபராதத்தை விதித்துள்ளார். (ஶ்ரீ-24)

# கல்வித்துறை இராணுவ மயப்படுத்தப்படுவதாக இலங்கை ஆசிரியர் ஒன்றியம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கல்வித்துறை இராணுவ மயப்படுத்தப் படுவதாக இலங்கை ஆசிரியர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது. பாடசாலை அதிபர் களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கும் திட்டம் கண்டிக்கப்பட வேண்டியது என ஆசி ரியர் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான பயிற்சிநெறிகளின் மூலம் அதிபர் பதவி நிந்திக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர்களுக்கு இராணுவ முகாம்களில் தலைமத்தவ பயிற்சி அளிக்கப்பட வேண்டிய அவசியம் கிடையாது என சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

தேசிய கல்வி நிறுவகம் உள்ளிட்ட பல் வேறு முக்கிய நிறுவனங்களில் ஏற்கனவே இவ்வாறான தலைமைத்துவ பயிற்சிகள் காத்திரமான முறையில் வழங்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளது.

அதிபர்களுக்கு இராணுவ முகாம்களில் தலைமைத்துவ பயிற்சி வழங்கும் முயற்சி கல்வித் துறையை மேலும் இராணுவ மயப் படுத்தும் நடவடிக்கையாக கருதப்படவேண் டுமென ஆசிரியர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கல்வித் துறையைச் சார்ந்தவர்களுக்கு தலைமைத்து பயிற்சி வழங்கப்படுவது சாதகமானது என்ற போதிலும் தெரிவு செய்யப்பட்ட குழு பிழை யானது என கல்வி தொழில்சார் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.(ஶ்ரீ-2)

## உதவித் தேர்தல் ஆணையாளராக கருணாநிதி நியமனம்

யாழ்.மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளராக எஸ்.கருணாநிதி நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரைகாலமும் இப் பதவியிலிருந்து வந்த எம்.குகநாதன் கொழும்பு தலைமைத்தேர்தல் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றதையடுத்து எஸ்.கருணாநிதி உதவித் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-6)


## வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## கேள்வி அறிவித்தல்-2011

**கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கு இக்ராட் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.**

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 31.05.2011 தொடக்கம் 14.06.2011 மு.ப.11.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :16.06.2011 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :16.06.2011 பி.ப.2.00 மணி
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ' செயலாளர்,வலி கிழக்கு பிரதேச சபை புத்தூர்' என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாகவோ எதிர்வரும் 16.06.2011ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைப்பதுடன் இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் , பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

**குறிப்பு : கீழ்க்குறிப்பிடப்பட்ட வீதி வேலைகளுக்குரிய தார் பிரதேச சபையால் வழங்கப்படும்.**

| இல. | வேலையின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணம் | VAT12% NBT 2 % |
|---|---|---|---|---|---|
| 1 | இருபாலை கற்பகப் பிள்ளையார் வீதி திருத்தம் | C10 | 10000.00 | 1000.00 | 142.40 |
| 2 | கோப்பாய் பழைய பொலிஸ்நிலைய வீதி திருத்தம் | C9 | 10500.00 | 1000.00 | 142.40 |
| 3 | உரும்பிராய் உப அலுவலக ஒழுங்கைத் திருத்தம் | C10 | 6000.00 | 1000.00 | 142.40 |
| 4 | உரும்பிராய் - பலாலி வீதி 1ம் ஒழுங்கை திருத்தம் | C10 | 5500.00 | 1000.00 | 142.40 |
| 5 | நீர்வேலி மோதிரக்கேணி இணைப்பு வீதி திருத்தம் | C9 | 12500.00 | 1000.00 | 142.40 |
| 6 | புத்தூர் விஸ்ணு வித்தியாலய வீதி திருத்தம் | C9 | 12000.00 | 1000.00 | 142.40 |
| 7 | அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதி திருத்தம் | C10 | 7000.00 | 1000.00 | 142.40 |
| 8 | அச்சுவேலி பெரியதம்பிரான் வீதி திருத்தம் | C9 | 10500.00 | 1000.00 | 142.40 |

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**வலி கிழக்கு பிரதேச சபை**
**தலைமை அலுவலகம்,**
**புத்தூர்**
**27.05.2011**

(C-3307)

**திருமதி ஜெ.சோமராஜ்**
**செயலாளர்.**

## வீடு வாடகைக்கு

27/8 ஆசாத் வீதி, யாழ்ப்பாணத்தில் நல்ல நிலையில் உள்ள வீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0750407568
(5026)

## காணி விற்பனைக்கு

அளவெட்டி மலவேம்படி சந்தைக்கு முன்பாகவுள்ள றோட்டிலிருந்து 3வது காணி 2 3/4 பரப்பு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0114949234
(5016)

## தவறிவிட்டது

செல்வி A.ஜீவிதா (உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்) என்பவருடைய முக்கிய ஆவணங்கள் 11/05/2011 அன்று 102, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள D.M.I என்னும் எமது நிறுவனத்தில் தவறிவிட்டது.

இவ் ஆவணங்களைக் கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:- 0775566224
(5023)

## JAFFNA GYM

## (யாழ் ஜிம்)

கட்டுக்கோப்பான உடல் அமைப்பிற்கும், ஆரோக்கியத்திற்கும் யாழ்.நகரில் எங்கும் இல்லாதவாறு புத்தம் புதிய நவீன இலத்திரனியல் உபகரணங்களுடன் ஆண், பெண் இருபாலாருக்குமாக கல்வியங்காட்டில் உதயமாகியுள்ளது.



இன்றே இணையுங்கள்
No. 20 , இராசவீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
0214917243



(சி-3308)

# இன்று ஒரு தகவல்

## குருபக்தி விளைவித்த அற்புதம்!

ஒருவர் இருந்தார். அவருக்கு குருநாதர் ஒருவர் தேவை. "நமக்கு நல்ல ஆன்மீக வழியைக் காட்டுவதற்கு குருநாதர் ஒருவர் கிடைக்க வேண்டும்'' என்று அவர் ஏங்கினார். பலநாள் அதற்காகத் தவித்தார்.

ஞானகுரு என்ற நிலையில் இருக்கும் ஒருவரும் அவருக்கு கிடைப்பதற்கான வழி ஒன்றும் தெரியவில்லை. அப்போது அவரது மனைவி ஒரு யோசனை கூறினார்.

இதோ பாருங்கள்... நாம் இருவரும் இப்போது புறப்பட்டு காட்டுக்குப் போவோம். நடுக்காட்டில் ஒரு நடைபாதையின் ஓரமாக உட்கார்ந்து கொள்வோம். அந்த வழியாக நமக்கு முன்னால் வரும் மனிதர் யாரோ, அவரையே நாம் நம் குருவாக ஏற்றுக் கொள்வோம்" என்று கூறினார்.

இருவரும் அதை ஆமோதித்து, இருவரும் காட்டுக்குச் சென்று நடுக்காட்டில் ஒரு பாதையின் ஓரமாக உட்கார்ந்தனர்.

அப்போது திருடன் ஒருவன் தான் களவாடிய பொருட்களோடு அந்த வழியாக வந்தான். இவர்கள் அவனைப் பார்த்தவுடன் ஓடிச்சென்று அவனது காலில் விழுந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர்.

''எங்களை வாழ வைக்க வந்த வள்ளலே! நீங்கள் தான் எங்களுக்கு! ஞானகுருவாக இருந்து ஒரு நல்ல ஆன்மீக வழியைக் காட்ட வேண்டும்; எங்களது பாவங்களைப் போக்க வேண்டும். எங்களுக்கு அருள்புரிய வேண்டும் என்று வேண்ட ஆரம்பித்தனர்.

திருடனுக்கு ஒன்றும் புரியவில்லை "என்ன இது... பழி பாவங்களுக்கு அஞ்சாமல் வழிப்பறி செய்வது நமது தொழில். இவர்களுக்கு நாம் எப்படி வழிகாட்டுவது? என்று அந்தத் திருடன் யோசித்தான். ''சரி, உண்மையைச் சொன்னால்தான்... இவர்கள் நம்மை விடுவார்கள் போல் இருக்கிறது!" என்று நினைத்து அவன், "ஐயா, நான் ஒரு திருடன்... நீங்கள் நினைப்பது போல் இல்லை" என்றான்.

ஆனால் ,அவர்களோ "அதெல்லாம் இல்லை... நீங்கள் தான் எங்களது குருநாதர்'' என்று மிகவும் உறுதியாக இருந்தார்கள். திருடன் பார்த்தான். ''இப்போது இங்கே தப்பிப்பதற்கு என்ன வழி?" என்று யோசித்தான்.

"சரி, நீங்கள் இரண்டு பேரும் அப்படியே பத்மாசனம் போட்டு இங்கு உட்காருங்கள்.... கண்களை மூடிக் கொள்ளுங்கள். நான் சொல்லும் வரையில் நீங்கள் அப்படியே உட்கார்ந் திருக்க வேண்டும்" என்றான்.

அதை குருநாதரின் கட்டளையாக அவர்கள் ஏற்றுக் கொண்டு, கண்களை மூடி உட்கார்ந்து விட்டனர்.

திருடன் உடனே, "தப்பிப்பதற்கு சரியான நேரம்" என்று நினைத்து மெதுவாக அங்கேயிருந்து நழுவி ஓடியே போய் விட்டான். அதன் பிறகு அவன் காவலர்களிடம் மாட்டிக் கொண்டான். அவர்கள் அவனை சிறையில் அடைத்தனர்.

இவர்கள் இருவரும் இங்கேயே இப்படியே உட்கார்ந் திருந்தனர். இவர்களின் மன உறுதி சிவபெருமானையே யோசிக்க வைத்தது. உடனே சிவனும் பார்வதியும் இவர்களின் முன்னால் வந்து காட்சி அளித்தனர்.

"இறைவனும் இறைவியும் வந்திருக்கிறோம். பக்தர்களே எழுந்திருங்கள் !" என்று கூறினார்கள்.

ஆனால், அவர்களோ ''பெருமானே! எங்கள் குருநாதரின் அனுமதியின்றி இந்த இடத்தை விட்டு நகர மாட்டோம்" என்று சொல்லிவிட்டார்கள்.

எனவே, இறைவனும் இறைவியும் உடனே அந்நாட்டு அரசனின் கனவில் தோன்றி, சிறையில் இருக்கும் திருடனை விடுதலை செய்யுமாறு கூறினர். அதோடு அவர்கள் திருடனின் கனவிலும் தோன்றி விபரம் கூறினர். திருடன் விடுதலையானதும் அந்தக் காட்டுக்குச் சென்றான்.

அவர்கள் அப்படியே அங்கேயே இன்னமும் கண்களை மூடிய படியே உட்கார்ந்திருந்தார்கள்.

திருடன் அவர்களிடம், "உங்கள் குருநாதன் வந்திருக்கிறேன் கண்களைத் திறந்து பாருங்கள்!'' என்றான். அப்போதுதான் அவர்கள் கண்களைத் திறந்தனர். திருடன் நடந்த நிகழ்ச்சிகளை அவர்களிடம் தெரிவித்தான்.

அப்போது ஆகாயத்திலிருந்து ஒரு அசரீரி ஒலித்தது.

"உங்களது தீவிர குருபக்தி போற்றுதலுக்குரியது. குருவிடம் பக்தியும் பணிவும் நம்பிக்கையும் கொண்டிருப்பவர்கள் எதையும் எல்லாவற்றையும் பெறுவர். அப்படியே நீங்களும் அனைத்தையும் அடைவீர்கள்!" என்று அந்தக் குரல் கூறியது.

தம்பதியர் ஞானத் தொளியை பெற்றனர். திருடனும் திருந்தி நல்லவனானான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும் சிவத்தொண்டர் மாநாடு

## இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சிவத்தொண்டர் மாநாடு இன்றும் நாளையும் நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இலங்கை இராமகிருஷ்ணமிஷன் தலைவர் வணக்கத்திற்குரிய சுவாமி சர்வரூபானந்தா ஆகியோர் முன்னிலையில் நடை பெறவுள்ளது.

இதில் முதலாம் நாள் அமர்வு நாவலர் அரங்கில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு மனித நேய மாமணி, இந்து சீரோரத்தினம் வி.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்று காலை அகில இலங்கை இந்து மாமன்ற யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் வேத பாராயணம் ஓதப்பட்டு பின்னர் இந்து ஆராய்ச்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டு அங்கிருந்து நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணிமண்டப நாவலர் அரங்கை நோக்கி ஊர்வலம் நகரவுள்ளது.

பிரதம விருந்தினராக இளைப்பாறிய உச்ச நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண இந்திய உயர்ஸ்தானிகராலயம் இராஜதந்திர அலுவல்கள் நாயகம் வி.மகாலிங்கம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், ஜனாதிபதி சட்டத்தரணி கனகநாயகம், கனகஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் "இந்து ஒளி" சிறப்பிதழ் வெளியீடு இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து பிற்பகல் அமர்வு 1.30 மணிக்கு அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவரும் தேசிய கல்வி நிறுவன முன்னாள் பணிப்பாளருமான கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் தலைமையில் இடம்பெறும்.

சுவாமி விவேகானந்தர் காட்டிய பாதையில் மக்கள் என்ற தலைப்பில் சிறப்புரையினை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தா ஆற்றுவார்.

அதனைத் தொடர்ந்து பசுமாடு உதவித்திட்டம், தையல் இயந்திர உதவித் திட்டம் ஆகிய வாழ்வாதார உதவிகளுக்கு சமூக நலன் அன்பளிப்புகள் வழங்கப் படவுள்ளன.

தொடர்ந்து நடைபெறவுள்ள ஆய்வரங்கில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.செல்வரஞ்சிதம், யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் பொ.சந்திரசேகரம், சைவப்புலவரும் சித்தாந்த பண்டிதருமான ஆ.தங்கமயில், யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி பவநேசன், க.ஈஸ்வரன் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றவுள்ளனர்.

மாலைநேர அமர்வுகள் மாலை 5.30 மணிக்கு தெய்வத் திருமகள், சிவத்தமிழ்ச் செல்வி அரங்கில் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் இலக்கிய கலாநிதி ம.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடை பெறவுள்ளது.

இதில் "செஞ்சொற் செல்வம்" சிறப்பு நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40-50 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 90 |
| தக்காளி | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 |
| கோவா | 70-80 | 80 | 70 |
| கரட் | 70-80 | 100 | 90 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 70 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 120-130 | 120 | 130 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 | 50 |
| பாகற்காய் | 70 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 70 |
| கருணைக் கிழங்கு | - | 90 | - |
| பயற்றங்காய் | 20 | 60 | 80 |
| லீக்ஸ் | 70 | 70 | 70 |
| பீற்றூட் | - | 90 | 60 |
| கறிமிளகாய் | - | 100 | 90 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 300 |
| போஞ்சி | - | 80 | 90 |
| கத்தரிதம்புள்ள | - | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10-12 | 40 | 30 |
| தேசிக்காய் | 140 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | ` 50 | 50 |

# இராசி பலன்

**28.05.2011**
**(வைகாசி 14,சனிக்கிழமை)**
**சூரியஉதயம் காலை 5.53 மணிக்கு**
**ஏகாதசி முன்னிரவு 9.49 மணிவரை**
**ரேவதி முழுவதும்**
**இராகுகாலம் 8.52-10.22 மணிவரை**
**சுபநேரம் 2.52-4.22 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

**மேடம்** கொடுக்கல் -வாங்கல்களில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் நன்மைகருதி பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையும், சயனசுகக் குறைவான நாள்.

**இடபம்** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்தி வந்து சேரும் நாள், வளர்ச்சிப்பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மிதுனம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், புதிய முயற்சிகள் வந்து சேரும், கட்டடப்பணியை தொடரும் எண்ணம் தோன்றும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன பணிகளைச் செய்து முடிப்பீர்கள், திடீர் பயணங்களால் பலனுண்டு, மனதில் ஊற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**சிங்கம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பிரயாண பயணமுண்டு, கௌரவக் குறைவான நாள், மனச்சஞ்சலம் உண்டு.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும், நாள், பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத்தினருடன் மகிழ்ச்சிகரமான பயணமொன்றை மேற்கொள்வீர்கள்.

**துலாம்** சுப செய்திகள் நாடி வரும் நாள், காலையிலேயே விருந்தினர் வருகையுண்டு, நல்லவர்களின் நட்புக் கிடைக்கலாம் உடல்நலம் சீராகும்.

**விருச்சிகம்** வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**தனுசு** தாராளமாகச் செலவிட்டு மகிழும் நாள், நல்ல நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், சிலர் உங்களிடம் உதவி கேட்க முன்வரலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும் நாள்.

**மீனம்** வாக்கு சாதுரியத்தால் வளம் காண வேண்டிய நாள், மாலை நேரப் பயணம் மகிழ்ச்சி தரும், அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

வளவன்

## வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில்

# சங்கு, கடலட்டைத் தொழில் மேற்கொள்ள படையெடுக்கும் தென்னிலங்கை மீனவர்கள்

## உள்ளூர் மீனவர்கள் கடுமையாகப் பாதிப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்குப் பகுதி கடற்பரப்பில் சங்கு மற்றும் கடலட்டைத் தொழில் மேற்கொள்வதற்காக நாளாந்தம் பெருமளவிலான தென்னிலங்கை மீனவர்கள் படையெடுத்த வண்ணமுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வடமராட்சி கிழக்கின் மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளி வரைக்கும் பெருமளவில் தென்னிலங்கை மீனவர்கள் சங்கு மற்றும் கடலட்டைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் உள்ளூர் மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக மீனவர் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக இப்பகுதி மீனவர் சங்கங்கள் கருத்து தெரிவிக்கையில், யுத்தம் முடிவுற்ற பின்னர் எமது மீனவர்கள் அச்சமின்றி ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடலாமென எண்ணியிருந்த போதும் அது முடியாமல் போனது. காரணம் இந்திய ரோலர்களும் இழுவைப் படகுகளும் எமது மீனவர்களின் தொழில் உபகரணங்களை நாசம் செய்து விட்டிருந்தனர்.

இதனால் ஆழ்கடல் தொழிலைக் கைவிட்டு கரையோர மீன்பிடியில் ஈடுபடலாமென எண்ணியபோதும் அது கைகூடாத நிலை எட்டுமளவுக்கு வந்துள்ளது. காரணம் சங்கு, கடலட்டைத் தொழிலை மேற்கொள்வதற்காக தென்னிலங்கை மீனவர்கள் படையெடுக்கின்றனர்.

குறிப்பாக கரைவலை மட்டும் பாவித்து கட்டுமரத்தில் தொழிலில் ஈடுபடுபவர்கள் அவர்கள் தொழிலில் ஈடுபடும் நேரத்தில் சங்கு, கடலட்டை தொழில் ஈடுபடுத்தப்படும் படகுகளின் இரைச்சல் காரணமாக மீன்கள் கரைநோக்கி வருவது குறைவடைந்துள்ளதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இவ்வாறான தொழில் தொடர்ந்து இடம்பெறுமானால் இங்குள்ள உள்ளூர்த் தொழிலாளர்கள் வருமானமின்மையால் தொழில் பாதிக்கப்பட்டு தமது வாழ்வாதாரத்தை நிறைவேற்ற முடியாத நிலையேற்படும்.

எனவே உரிய தரப்பினர் நடவடிக்கையினை மேற்கொண்டு இவ்வாறான தொழிலைத் தடுத்து நிறுத்த வேண்டுமென கடற்றொழிலாளர்களும் கடற்றொழில் சார்ந்த சங்கங்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ஸ்ரீ-64)




# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வள்ளுவர் அக்கடமியின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.52 மணிக்கு நிர்வாக இயக்குநர் ஆ.ஜெயபாலசிங்கம் தலைமையில் வள்ளுவர் அக்கடமி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்துசிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ)

# க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடாத்தவிருக்கும் க.பொ.த. (உயர்தரம்) தரம்-13 (2011) உயிரியல் பிரிவில் கற்கும் மாணவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பில் கற்பிக்கும் பிரபல ஆசிரியரினால் புதிய பாடத்திட்டத்திற்கமைவான மாதிரி வினாத்தாள் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

# பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் வலிகாமம் கல்வி வலயம் முதலிடம்

(சுன்னாகம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 2011ஆம் ஆண்டிற்கான மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 3 தினங்களாக யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதற்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று வலிகாமம் கல்வி வலயம் முதலாம் இடத்தினையும் யாழ்.கல்வி வலயம் இரண்டாம் இடத்தினையும் வடமராட்சி கல்வி வலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம், திருமதி பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஸ்ரீ-54)

# உழவு இயந்திரத்தின் சில்லுக்குள் அகப்பட்டு வயோதிபப் பெண் மரணம்

## சாரதி பொலிஸாரால் கைது

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் பிள்ளையார் ஆலயத்தில் தரிசனம் முடித்துவிட்டு வீடு திரும்பிய வேளை அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியையான இராசதுரை இராசமலர் (வயது 62) என்பவர் உழவு இயந்திரத்திற்கு முன் செல்ல வழிவிடும்போது உழவு இயந்திரச் சில்லுக்குள் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை 9.40 மணிக்கு இடம்பெற்றது.

இவரது சடலம் அச்சுவேலி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காகவும் பொலிஸ் விசாரணைக்காகவும் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உழவு இயந்திர சாரதியை பொலிஸார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். (ஸ்ரீ-70)

# கரவெட்டி கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

(அல்வாய்)

தரம் - 12

**பார்த்தெழுதுதல்**

ஸ்ரீ.சாகிர்த்தியா (யா/நெல்லியடி ம.ம.வி.), ஞா.பிரவீனா (யா/நெல்லியடி ம.ம.வி.), கு. மௌனிகா (யா/வட. மத்திய மகளிர் கல்லூரி)

**எழுத்துருவாக்கம்**

வி.முகுந்தன் (யா/நெல்லியடி ம.ம.வி.), செ.மயூரா (யா/நெல்லியடி ம.ம.வி.), வி. லாவண்யா (யா/விக்கினேஸ்வராக் கல்லூரி)

**சொல்வதெழுதுதல்**

செ.மயூரா (யா/நெல்லியடி ம.ம.வி.), கு.மௌனிகா (யா/வட. மத்திய மகளிர் கல்லூரி), வி.முகுந்தன் (யா/நெல்லியடி ம.ம.வி.)

**ஆயத்தம் செய்து பேசுதல்**

செ.சஞ்சிகா (யா/நெல்லியடி ம.ம.வி.), ஸ்ரீ.சாகிர்த்தியா (யா/நெல்லியடி ம.ம.வி.), தி.கலைவாணி (யா/வட. மத்திய மகளிர் கல்லூரி)

ள(ஸ்ரீ-19)

# கல்விக் கருத்தரங்கு

(குருநகர்)

அமலமரித் தியாகிகள் அருட்பணியாளர்களின் ஏற்பாட்டில் குருநகரைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு கல்வி சம்பந்தமான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிளக்கு கலாசார மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் பிரதம வளவாளராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்ணாட், விரிவுரையாளர் கே.சுகர்ணராஜா ஆகியோர் கலந்து கொண்டு கருத் துரை நிகழ்த்தவுள்ளார்கள். (ஸ்ரீ-39)

# மணிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சிறந்த சமூகசேவையாளரும் ஆசிரியப் பெருந்தகையுமான சபா குகதாசனின் (குகன் ஆசிரியர்) மணிவிழா நிகழ்வு இன்று பிற்பகல் 1.45 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் யா/ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆவரங்கால் நடராஜ ராமலிங்கம் தேவஸ்தான பிரதம குரு. சிவ ஸ்ரீ வே. நடராசாக் குருக்கள் ஆசியுரையினை வழங்குவார். (ஸ்ரீ)

# நீண்டகாலமாக திருத்தப்படாதுள்ள வீதியால் பயணிக்க முடியாத நிலை

## பொதுமக்கள் சிரமம்

(மாதகல்)

மாதகல் பண்டத்தரிப்பு பிரதான வீதியானது நீண்டகாலமாகத் திருத்தப்படாது குன்றும் குழியுமாகவுள்ளது.


குறிப்பாக அவ்வீதியிலுள்ள மின்விளக்குகள் ஒளிராத நிலையில் காணப்படுகின்றது.


இதனால் வீதியால் பிரயாணம் செய்யும் பல பிரயாணிகள் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனை உரிய தரப்பினர் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

(ஸ்ரீ-47)







யாழ்/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் மாணவ தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு நேற்றுக் காலை பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட கரவெட்டிக் கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம் உரையாற்றுவதையும் அவரது பாரியார் மாணவத் தலைவர் ஒருவருக்கு சின்னஞ்சூட்டுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-கரவெட்டி செய்தியாளர்)*

# டெல்லியில் தங்கிடவா? கனியிடம் தழதழத்தார் கலைஞர்



15க்கு 10 அடி நீள அகலம்தான் அந்த அறை. கல் படுக்கையும் ஒரு காற்றாடியும். தமிழகத்துக்கே இலவசத் தொலைக்காட்சிப் பெட்டி அளித்தவரின் மகளுக்கு சிறையில் சிறப்புச் சலுகையாக ஒரு சின்னத் தொலைக்காட்சிப் பெட்டி. படிப்பதற்கான மனநிலை இருக்குமோ இருக்காதோ... கைவசம் ஆறு புத்தகங்கள்... ஆம், திஹார் சிறையில் கனிமொழி!

தி.மு.க-வின் ராஜ்யசபா எம்.பி, முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மகள்... சக்தி வாய்ந்த அடையாளங்கள் சட்டத்தின் முன் தோற்கடிக்கப்பட, திஹாரில் சிறை எண் 6இல் அடைக்கப்பட்டார் கனிமொழி. அலைக்கற்றை விவகாரத்தில் கனிமொழியின் பெயர் அடிபடத்தொடங்கிய நாளில் இருந்தே, கருணாநிதியின் தூக்கம் தொலைந்துவிட்டது. கட்சியின் உயர்நிலை செயல்திட்டக் குழுவைக் கூட்டி இது கனிமொழி மீதான பிரச்சினை இல்லை. கட்சியின் மதிப்புக்கு பங்கம் உண்டாக்கும் பிரச்சினை! எனச்சொல்லி தீர்வுக்கு வழி கேட்டார். ஆனால், காங்கிரஸ் கூட்டணியில் இருந்து விலகுவது நல்லதல்ல! என கட்சிக்காரர்களே கருணாநிதியின் எண்ணத்துக்கு அணை போட்டார்கள். 'கனிமொழி என் மகள் மட்டுமல்ல... இந்தக் கட்சிக்காக பெரிதாகத் தொண்டாற்றியவர். அவரும் அவருடைய தாயாரும் படுகிற பாட்டை என்னால் சொல்ல முடியவில்லை!' எனக் கட்சி நிர்வாகிகள் மத்தியில் கருணாநிதியால் தழுதழுக்க மட்டுமே முடிந்தது.

'பிரசித்தி பெற்ற வழக்கறிஞரான ராம்ஜெத்மலானியை வாதாட வைத்தால், நிச்சயம் கனிமொழிக்கு பெயில் கிடைக்கும்' என நம்பினார் கருணாநிதி. ஆனால், ஜெத்மலானியின் வாதமும் கனிமொழியைக் காப்பாற்றாமல் கைவிட்டதுதான் கருணாநிதியின் பெரும் துயரம்.

20ஆம் திகதி காலையில் கணவர் அரவிந்தனுடன் சி.பி.ஐ. கோர்ட்டுக்கு வந்தார் கனிமொழி. டி.ஆர்.பாலு உள்ளிட்ட தி.மு.க. எம்.பி க்களுடன் மகளிர் அணியினரும் குழுமி இருந்தார்கள். 'பெயில் மனு நிராகரிக்கப்பட்டால், அடுத்த கணமே கைதாக வேண்டி இருக்கும்!' என்பதால், மகன் ஆதித்யனை கனிமொழி கோர்ட்டுக்கு அழைத்து வரவில்லை.

மீடியா வெளிச்சம் படாமல் பையனை வளர்ப்பதில் ஒரு காலத்தில் உறுதியாக இருந்தவர் கனிமொழி. ஆதித்யனின் பிறந்த நாளுக்கு வாழ்த்து தெரிவிக்க வந்த ஒரு முன்னாள் அமைச்சரைக் கையெடுத்துக் கும்பிட்டு, 'அவனைப் பெரிய ஆளா ஆக்கிடாதீங்க!' என வேண்டியவர். ஆனால், கோர்ட்டுக்கு அனுதினமும் வந்து கையெழுத்திட வேண்டும் என உத்தரவு வந்தபோது, மகனோடு வர வேண்டிய இக்கட்டு கனிமொழிக்கு.

20ஆம் திகதி மதியம் தீர்ப்பை வாசித்த நீதிபதி சைனி, 'குற்றச் சதியில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் வலுவாக இருக்கின்றன. சாட்சிகளைக் கலைக்கும் வாய்ப்பும் அதிகம். அதனால், முன் ஜாமீன் மனு நிராகரிக்கப்படுகிறது!' என அறிவிக்க, அரவிந்தனின் தோளில் சாய்ந்து கண் கலங்கினார் கனிமொழி.

மகளுக்கு எப்படியும் பெயில் கிடைத்துவிடும் என நம்பி இருந்த ராஜாத்தி அம்மாள் பதறி அடித்து டெல்லிக்குக் கிளம்பினார். ஆனால், அவர் வருவதற்கு முன்னரே, திஹார் ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார் கனிமொழி, சிறைக்குள் போகும் முன்னர் கனிமொழி, அரவிந்தனைக் கூப்பிட, அவர் பதறியடித்து ஓடி வந்தார். 'நான் ஆதித்யனிடம் பேசணுமே...' எனக் குரல் உடைந்து சொல்லியிருக்கிறார் கனிமொழி. அதற்கு பொலிஸ் அனுமதி மறுக்க, 'என்னைப் பிரிஞ்சு ஒரு நாள்கூட இருக்க மாட்டான். ஆதி கிட்ட நான் ஸாரி கேட்டதா சொல்லிடுங்க!' என்ற படியே

## வண்ணத் தொலைக்காட்சி வழங்கியவரின் மகளுக்கு சிறையில் சின்னத் தொலைக்காட்சி

சிறை வளாகத்துக்குள் போனார் கனிமொழி.

சிறை விதிகளின்படி, வாட்ச், அணிகலன்கள் உள்ளிட்டவற்றைக் கழற்றிவிட வேண்டும். கைப்பையை நீங்கள் வைத்துக்கொள்ளலாம். ஆனால், மூக்குத்தியைக் கழற்றிக் கொடுங்கள்! என சிறை அதிகாரி சொல்ல, கனிமொழி எதிர்பாரா அதிர்ச்சியில் நிலை குலைந்தது அங்கேதான்.

அஞ்சாவது படிக்கிற காலத்தில் இருந்து மூக்குத்தி போடுறேன். அவசியம் கழற்றித்தான் ஆகணுமா? எனக் கலங்கினார் கனி. மூக்குத்தியை அவ்வளவு சுலபமாகக் கழற்ற முடியவில்லை. தி.மு.க வின் எம்.பிக்களான வசந்தி ஸ்டான்லியும் ஹெலன் டேவிட்சனும் பொலிஸ் அனுமதி பெற்று உள்ளே போக, அங்கே கனி அமர்த்தப்பட்டு இருந்த கோலம் அவர்களைக் கதறவைத்து விட்டதாம். சிறை சம்பிரதாயங்களை முடித்துவிட்டு, கண்ணீர் முட்ட உள்ளே போன கனிமொழி திரும்பத் திரும்பச் சொன்ன வார்த்தைகள்... 'ஆதித்யனைப் பத்திரமாப் பார்த்துக்கங்க!

திஹார் சிறையில் பணியாற்றும் பெண் அதிகாரி ஒருவர் இரண்டு வாரங்களுக்கு முன் சி.ஐ.டி நகருக்கு அழைத்து வரப்பட்டார். சிறை எப்படி இருக்கும், என்னென்ன சாப்பாடு, உள்ளே யாருக்கு அதிகாரம் அதிகம் போன்ற விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். அதனால், 6ஆம் எண் அறையைப் பார்த்து கனிக்கு பெரிதாக அதிர்ச்சி இல்லை. அரை மணி நேரத்துக்குப் பிறகு கூடுதலாக இரண்டு தலையணைகள் கேட்டு வாங்கிக்கொண்டார். இரவு அவர் சரியாகத் தூங்கவில்லை. பெண் அதிகாரி ஒருவர் மூலம் மகனுடைய செல்போனுக்கு எஸ்எம்எஸ் அனுப்பச் சொன்னார். இந்த வருடம் ஆதித்யன் ஆறாம் வகுப்பு சேர வேண்டும். அவனைப் பற்றிய கவலைதான் கனிமொழியை வாட்டு



கிறது! என்கிறார்கள் டெல்லி தி.மு.க. புள்ளிகள்.

அடுத்த நாள் பாட்டியாலா சி.பி.ஐ. கோர்ட்டுக்கு வந்தார் கனிமொழி. அதற்கு முன்னதாகவே கோர்ட்



டுக்கு வந்து வராண்டாவில் காத்திருந்த ராஜாத்தி அம்மாள் மகளைக் கட்டிப் பிடித்துக் கலங்கினார். என்னால்தானே இத்தனையும்... என ராஜாத்தி சொல்லி அழ, அவரை அமைதியாக்கி இரகசியமாக ஏதோ சொன்னார் கனிமொழி. உடனே சரத் ரெட்டியையும். ஆ.ராசாவையும் சந்தித்து ஏதோ பேசினார் ராஜாத்தி அம்மாள். அப்போது கண்ணீர் மறைந்து... கோபமும் ஆவேசமுமாக இருந்தது அவருடைய முகம்.

ஆ.ராசாவின் மனைவி பரமேஸ்வரி ஆதித்தியனை அழைத்து வர கனிமொழிக்கு மீண்டும் கண்ணீர் கோத்துக்கொண்டது. "அம்மா எப்போ வெளியே வரப்போகிறேன்னு தெரியலை பத்திரமா இரு. அம்மாவைப் பாக்கனும் என்னு அடம்பிடிக்காதே... எனத் தளும்பிய கண்களுடன் கனிமொழி சொல்ல, "நான் பத்திரமாப் பார்த்துக்கிறேன். நீங்க தைரியமா இருங்க!" என ஆறுதல் சொன்னார் பரமேஸ்வரி. டெல்லியில் உள்ள ஆ.ராசாவின் வீட்டில் அவருடைய மனைவி பரமேஸ்வரியின் பராமரிப்பில்தான் இருக்கிறார் ஆதித்யன்.

காந்தி அழகிரி, துரை தயாநிதி ஆகியோர் கோர்ட்டில் கனிமொழியைச் சந்தித்தனர். 'அண்ணி...' என அடக்க மாட்டாமல் கனிமொழி விசும்ப, அவரைத் தோளில் சாய்த்துத் தேற்றினார் காந்தி அழகிரி இதற்கிடையில், ஸ்டாலின் சொல்லி அனுப்பிய ஆறுதலும் கனிமொழிக்கு ஆறுதல் வார்த்து இருக்கிறது.

23ஆம் திகதி காலையிலேயே டெல்லி கிளம்பிய கருணாநிதி, திஹாருக்குப்போய் கனிமொழியைச் சந்தித்தார். அங்கே கனிமொழி சில விஷயங்களை வேதனையோடு சொல்லிக் கலங்க, 'நான் இங்கேயே தங்கிடவாம்மா?' என தழுதழுத்திருக்கிறார் கருணாநிதி. விழிகள் துடைத்து தன்னைத்தானே தேற்றிக் கொண்ட கனிமொழி, 'நீங்க கிளம்புங்கப்பா... நான் பார்த்துக்கிறேன். ஆதித்யனை கவனிச்சுக்கங்க!' எனச் சொல்லி இருக்கிறார்.

எப்போதும் இல்லாத அளவுக்கு டெல்லியில் தற்போது 42 டிகிரி செல்சியஸுக்கும் அதிகமாக அனல் அடிக்கிறது. மக்கள்படும் துயரம் பொறுக்காமல் கருணாநிதி எத்தகைய முடிவையும் எடுப்பார் என்கிற நிலையில், டெல்லியின் அனல் இன்னும் அதிகமாகலாம்!



நோர்வே அரசியலமைப்பு தின வைபவம் நோர்வே தூதரகத்தினால் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவுடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# வவுனியா மாவட்டத்திலுள்ள 200 குளங்கள் புனர்நிர்மாணம்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் கைவிடப்பட்ட 200 குளங்களை அடுத்த மூன்று வருடத்தில் புனர்நிர்மாணம் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் ஈட்டிமுறிப்புகுள புனரமைப்பு வேலைகள் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு வவுனியாவில் 20 குளங்கள் புனரமைக்கப்பட்டவுள்ளன. ஒவ்வொரு குள அபிவிருத்திக்கும் சுமார் 10 மில்லியன் ரூபாய் செலவிடப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் இந்தப் பாரிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 200 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிபாபா பாறூக், மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சார்ள்ஸ், ஜனாதிபதியின் இணைப்பாளர்களான சிவநாதன் கிஷோர், சி.கனகரத்தினம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# நுளம்பு பரவும் இடங்களில் பி.ரி.ஐ. பக்ரீறியாக்களை தெளிக்க தீர்மானம்

(கொழும்பு)

மழையுடன் கூடிய காலநிலையினால் நாட்டில் டெங்கு நோய் பரவும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பி.ரி.ஐ. பக்ரீறியாக்களை பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

நுளம்புகள் பரவக்கூடிய இடங்களில் இந்த பக்ரீறியாக்களைத் தெளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் கொழும்பு நகரில் இந்த பக்ரீறியாக்களை முதலில் தெளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த சில மாதங்களில் கொழும்பில் டெங்கு நோய் அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

## அரச உயர்மட்டத்தினர் கலக்கம்

(கொழும்பு)

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான பிரேரணையொன்றை கரு ஜயசூரிய பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருப்பது அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவை முன்னுதாரணமாகக் கொண்டு அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நாட்டின் நன்மை கருதிய பொதுமக்கள் தொடர்புபடும் விடயங்கள் குறித்த தகவல்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையிலான தகவல் அறியும் உரிமைச் சட்ட மூல மொன்றுக்கான பிரேரணை ஒன்றை ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜயசூரிய பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அவ்வாறானதொரு சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் இந்திய அரசியல் வாதி களின் ஊழல்கள் குறித்து பொதுமக்கள் விபரங்களைக் கோரத் தொடங்கியிருப்பதைப் போன்றதொரு நிலைமை எதிர்காலத்தில் இலங்கையிலும் ஏற்படலாம் என்ற அச்சத்தில் அரசாங்க உயர்மட்டத்தினர் கலக்கமடைந்துள்ளனர்.

அதன் காரணமாக வழமையான பாராளுமன்ற சம்பிரதாயங்களை மீறி பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்த தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான பிரேரணையை நிகழ்ச்சி நிரலில் இருந்தே அகற்றிவிட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தப்பித் தவறியேனும் அவ்வாறானதொரு சட்டமூலத்திற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு கிடைத்துவிட்டால் தாங்கள் மேற்கொண்ட ஊழல்கள் வெளிவருவது மட்டுமன்றி நிகழ்கால மற்றும் எதிர்கால ஊழல் மோசடி செயற்பாடுகளுக்கும் தடை ஏற்பட்டுவிடும் என்று அவர்கள் அஞ்சுவதே அதற்கான காரணமாகும். (ஸ்ரீ-2)

# அனுமதியின்றி சாராய விற்பனை; 6 பேருக்கு நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த மூவருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் 18 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது. யாழ். மாநகர சபைக் குட்பட்ட பகுதியிலிருந்தே இவர்களை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். குறித்த நபர்கள் மீது தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா ஒவ்வொருவருக்கும் தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை அனுமதிப்பத்திர மின்றி சாராயம் விற்பனை செய்த மூவருக்கு எதிராக யாழ். மாவட்ட மதுவரித்திணைக் களத்தால் யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் நடவடிக்கையை அடுத்து யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இருந்தே இவர்கள் பிடிக்கப்பட்டனர். குறித்த நபர்களுக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா 8 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

குறித்த நபர்கள் தமது உடைமையாக வைத் திருந்த சாராயத்தின் அளவைக் கருத்தில் கொண்டு ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் மற்றைய இருவருக்கும் 2 ஆயிரம் மற்றும் ஆயிரம் ரூபா தீர்ப்பளித்தார். (ச-6)

# லசந்த படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபருக்கு பாதுகாப்பு வழங்க உத்தரவு

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் அமரர் லசந்த விக்ரமதுங்க படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபருக்கு உச்சளவு பாதுகாப்பு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

லசந்த படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் கல்கிஸ்ஸ நீதிமன்றில் நடைபெற்றது. விசாரணைகளின் போது சந்தேக நபர்களில் ஒருவரான முன்னாள் இராணுவ புலனாய்வு உத்தி யோகத்தர் நீதிமன்றில் வாக்குமூலமொன்றை அளித்துள்ளார்.

படுகொலைச் சம்பவத்துடன் சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவரை தொடர்புபடுத்துமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரசன்ன அல்விஸ் தம்மிடம் கோரியதாக முன்னாள் புலனாய்வு அதிகாரி கந்தேகெதர பிரியவன்ச தெரிவித்துள்ளார்.

அரச தரப்பு சாட்சியாக மாறினால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அளிப்பதாகவும் பொலிஸார் வாக்குறுதி அளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கூற்று தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் கோரியுள்ளார்.

எவ்வாறெனினும் முன்னாள் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தரின் இந்தக் கூற்று பொய்யானது என பயங்கரவாத விசாரணைப் பிரிவின் துணை பொலிஸ் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வழக்கு விசாரணைகளின் போது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நீதிமன்றில் ஆஜராகி சாட்சியமளிப்பார் என அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜுன் மாதம் 9 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

கரம்பொன் அன்னை வேளாங்கன்னியின்
35 ஆம் ஆண்டு பெருவிழா
கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறை
29.05.2011
வைகாசி 25ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 4.00 மணிக்கு கொடியேற்றத்துடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகும்.
வைகாசி 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழா திருப்பலி தொடர்ந்து வீதி உலாவுடன் கொடி இறக்கப்பட்டு முடிவுறும்.
இங்ஙனம்
பங்குத்தந்தையும், பங்குமக்களும்.
அர்ச் செபஸ்தியார் ஆலயம்
கரம்பொன் தெற்கு.
(C-3278)

ஊடக அனுசரணை:-
A.C.D. Jaffna, Colombo.

# இலங்கையை உலுப்பிவரும் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

**பாலியல் சார்ந்த வன்முறைக்கு சாதகமான முகாம்களில் சூழலை மாற்றுவதற்கு அரசாங்கம் தவறியுள்ளது.**

**(73) (இ) பொதுமக்கள் பட்டினிச்சாவு மற்றும் மனிதாபிமான நிவாரண நிராகரிப்பு மீதானதடை**

211. பட்டினிச்சாவையும் யுத்த முறையாகப் பாவிப்பதை சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தடை செய்கிறது. பாரபட்சமற்ற முறை



யிலும் மற்றும் எதுவிதபாதகமான வித்தியாசமின்றி கட்டுப்படுத்தும் அவர்களின் உரிமைக்கு ஏற்ப தேவையை எதிர்கொண்டிருக்கும் பொது மக்களுக்கான மனிதாபிமான நிவாரணம் சென்றடைவதை அனுமதித்து மற்றும் தீவிரமாகவும் தடையின்றியும் செல்வதற்கான வசதியை வழங்குவதை தரப்பினர்மீது சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தேவைப்படுத்துகிறது. (விதிகள் 53, மற்றும் 55, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)

212.(டி)குறைந்த அளவிலான உணவு நிவாரணத்தை நியாயப் படுத்துவதற்காக வேண்டுமென்றே, மற்றும் பகிரங்கமாக பொதுமக்கள் எண்ணிக்கையை குறைத்து மதிப்பிட்டு, (டிடி) மனிதாபிமான வாகனத்தொடர்கள் மற்றும் கப்பல்கள் யுத்தவலயத்தைச் சென்றடைவதற்கு இடையூறு விளைவித்தது. மற்றும் (டிடிடி) தெரிந்து கொண்டே மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோருக்கு அருகில் செல்தாக்குதலை நடாத்தி இந்த ஏற்பாட்டை அரசாங்கம் மீறியதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

அதன் விளைவாக குறிப்பாக

**தமிழாக்கம் தொடர் 27**

இரண்டாவது யுத்தசூன்ய வலயத்தில் பொதுமக்களுக்கு அத்தியவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துவகைகள் கிட்டாமற் செய்யப் பட்டது. குறிப்பாக அதன் உதவி அரசாங்க அதிபரிடம் இருந்து அதற்குக் கிடைத்த அறிக்கைகள்மூலம் அரசாங்கம் இந்த விளைவுகளை அறிந்திருந்தது எனக் குற்றஞ்சாட்டப்படலாம்.

**4. பாதிக்கப்பட்டோர் மற்றும் யுத்தத்தில் இருந்து உயிர் பிழைத்தவர்கள் அனுபவித்த மனித உரிமைகள் மீறல்கள்**

213. யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் இவ்வகையான அரசாங்க நடவடிக்கைகள் நடைபெற்றதால், அவற்றை சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஆகிய இரண்டின் கீழும் குழு ஆராய்கிறது.

**(அ) ஜெனீவா உடன்படிக்கைகளின் 3 ஆவது பொதுவான உறுப்புரை**

214. "சுயமரியாதை, குறிப்பாக அவமானப்படுத்தும் மற்றும் இழிவு படுத்தும் விதத்தில் நடத்துவதைக் கொண்ட அட்டூழியங்கள் தடை தொடர்பாக கொலை செய்யப்படுமுன் அல்லது தடுத்து வைக்கப்படுமுன் இராணுவத் தடுப்புக்காவலில் இருக்கும்போது பெண்கள் மற்றும் சிறுமிகள், குறிப்பாக எல்.ரி.ரி.ஈ. சந்தேகநபர்கள், மீது இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட கற்பழிப்பு அல்லது பாலியல் குற்றங்கள் மூலம் இந்த ஏற்பாடு மீறப்பட் டுள்ளதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

வேண்டுமென்றே நிர்வாணமாக்கப்பட்ட பெண்களின் உடம்புகளைக் கொண்ட குறிப்பாக சனல் 4 வீடியோ மற்றும் புகைப்படங்களை உள்ளிட்ட இறந்த ஒரு பெண் உறுப்பினர் எனக் காணப்படும் ஒருத்தி அதனோடு வரும் இலங்கை இராணுவ் வீரர்களின் மோசமான குறிப்புகளும் கொலை செய்யப்படுவதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்போ கற்பழிப்பு அல்லது பாலியல் வன்முறை நிகழ்ந்திருக்கலாம் என்பதற்கான உறுதியான ஊகத்தை வழங்குகிறது. பிரித்தெடுக்கும் செயற்பாட்டின்போது இடம்பெயர்ந்த பெண்கள் மிக இழிவாக நடாத்தப் படுவதையும் நம்பகமான குற்றச் சாட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

**74) ஆ) வலுக்கட்டாயமாக காணமல் போதல்கள் மீதான தடை**

215. வலுக்கட்டாயமாகக் காணாமல் போதல்களை சர்வதேச மனிதாபிமான சட்டம் தடைசெய்கிறது. (விதி 98 ஐ.சி.ஆர்.சி. ஆய்வு) இலங்கை இராணுவம் மற்றும் துணைப்படைப் பிரிவுகள் பல்வேறு அமைவிடங்களிலிருந்து பிரித்தெடுக்கும் செயற்பாட்டின்போது மற்றும் சரணடையும் இடங்களில் நபர்களை எடுத்துச் சென்று அதன் பின்னர் அவர்கள் காணப்படவில்லை, மற்றும் அவர்கள் பற்றிய தகவல்கள் இல்லை என்பதற்கேற்ப, நம்பகமான குற்றச்சாட்டுக்களின்படி இந்த ஏற்பாடு மீறப்பட் டுள்ளது.

கற்றபாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழுவின் அமர்வுகளின்போதும் இந்த விடயம் பற்றி கேள்வி எழுப்பப்படுள்ளது.

**(இ) தடுத்து வைக்கப் பட்டவர்களுக்கு குறைந்த பட்சத்திலான பராமரிப்புக்கான தேவைப்படுத்தல்கள்**

216. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு போதியளவு உணவு, நீர், உடை, தங்குமிடம் மற்றும் மருத்து வவசதியினை தரப்பினர் வழங்க வேண்டும் என்பதை சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தேவைப் படுத்துகிறது(விதி118, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)

இலங்கை அரசாங்கம் இடம் பெயர்ந்தவர்களை குறைந்தபட்ச நிலைமைகள் நிறைவேற்றப்படாத நிலையில் தடுத்து வைத்ததைக் கொண்டு ஆயுதம்தாங்கிய மோதலின் போது இந்த ஏற்பாடுகள் மீறப்பட் டதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

**(ஈ) இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான தேவைப்படுத்தல்கள்**

217. இறந்தவர்களைத்தேடி அவர்களுக் குத்தக்க மரியாதையை வழங்கி புதைகுழிகளின் அமைவிடங்கள் பற்றி பதிந்து காணாமல் போனவர்களுக்கு நேர்ந்த கதிபற்றிக் குடும்பத்தினருக்கு அறிவிப்பதை சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தரப்பினரைத் தேவைப்படுத்துகின்றது. (விதிகள் 112, 113, 115, 116 மற்றும் 117, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)

218. இறந்த பொதுமக்கள் அல்லது போராளிகள் பற்றித் தேடுவதற்காக அரசாங்கம் தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்ப தால் இந்த ஏற்பாடுகளை மீறியதை நம்பகமான குற்றச்சாட் டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இவர்களுள் அநேகர் வன்னியில் அடையாள மிடப்படாத புதை குழிகளில் புதைக்கப்பட்டார்கள்.

கற்றபாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாடு பற்றிய ஆணைக் குழுவின் முன் சமர்பிக்கப்பட்டது போன்று சரணடைபவர்களைப் பிரிக்கும் செயற்பாட்டின்போது சிலர் காணாமல் போயிருக்கலாம். கணிசமான எண்ணிக்கையிலான முன்னாள் போராளிகளையும் பொதுமக்களையும் புறத் தொடர்பற்ற முகாம்களில் அவர்களுக்கு நேர்ந்தது பற்றிக் குடும்ப உறுப்பினர்களுக்கு அறிவிக்காமல் அல்லது குடும்பங்களை ஒன்று சேர்ப்பதற்கு தேடுதல் திட்டம் ஒன்றை ஏற்படுத்தாமல் அது அடைத்து வைத்தது.



"இறந்தவர்கள் மரியாதையுடன் புதைக்கப்பட்டு புதைகுழிகளுக்கு மரியாதை வழங்கி அவை பேணப் படவேண்டும் என்ற சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் விதியை குழு நினைவூட்டுகின்றது. (விதி 115 ஐ.சி.ஆர்.சி. ஆய்வு) நிர்வாணமான பெண்களின் சடலங்கள் உள்ளிட்ட சடலங்களை மிகவும் மரியாதைக் குறைவாக இலங்கை இராணுவத்தினர் போன்று தென்படுவோர் நடாத்துவதைக் காட்டும் வீடியோ சுருளையும் புகைப்படங்களையும் குழு கண்டது.

**(75) (உ) உயிர் வாழ்வதற்கான பௌதீகப்பாதுகாப்பு மற்றும் ஆட்களின் உரிமை**

219. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் உயிர் வாழ்வதற்கான உரிமையை சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கையிலிருந்து பாதுகாத்து மனிதர்களின் பௌதிகப் பாதுகாப்பிற்கான உரிமையை உத்தரவாதம் செய்கிறது (ஐ.சி.ஆர்.சி. உறுப்புரைகள் 6 மற்றும் 9) சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான இரக்கமற்ற அல்லது இழிவாக்கும் விதத்தில் நடாத்துதல் அல்லது தண்டணை வழங்குதல் ஆகியவற்றிற்கு எதிராக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பும் இவற்றோடு நெருக்கமாகத் தொடர்புபட்டுள்ளது.

(C.C.B.R. உறுப்புரை 7 மற்றும் சித்திரவதைக்கு எதிரான உடன் படிக்கை)

பாலியல் மற்றும் ஆண் பெண் வித்தியாசத்தின் அடிப்படையிலான வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றிக்கு எதிரான பாதுகாப்பையும் இவ்வுரிமைகள் உள்ளடக்குகின்றன.

(76) 220. வரவேற்றுத் தடுத்து வைக்கப்பட்ட ஆரம்பகட்டங்களில் போதியவு உணவு, நீர் மற்றும் சுகாதாரப்பராமரிப்பு ஆகியவற்றை வழங்குவதற்கு அது தவறிய காரணத்தினால் மெனிக்பாமில் அரசாங்கத்தின் கட்டுப்பாடு மற்றும் ஆதிக்கத்துக்குள் தடுக்க முடிந்த மரணங்கள் காரணமாக இந்த ஏற்பாடு மீறப்பட்டுள்ளதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன. துணைப்படைகள் முகாம்களுக்கு நுழைய வழிவிட்டுத் தொடர்ந்தும் மக்களை எடுத்துச் செல்ல அதிகாரத்தை வழங்குவதன் மூலம் இடம்பெயர்ந்தோர் பௌதிகப்பாதுகாப்பை அரசாங்கம் உத்தரவாதம் செய்யவில்லை.

சி.ஐ.டி. மற்றும் ஐ.டி.யினால் விசாரணை செய்யப்படும்போது கொடூரமான இரக்கமற்ற மற்றும் இழிவுபடுத்தும் விதத்தில் நடத்தப் படுதல் கற்பழிப்பு அல்லது சித்திரவதை நேர்ந்திருக்கலாம்.

(தொடரும்)

# திராட்சையில் பீடைகளும் முகாமைத்துவமும்

(14-VIII)



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

### துகள் பூஞ்சண நோய்கள் (Mildea diseases)

*வாருங்கள் எம்மினிய உறவுகளே!*


எங்களூரில் தரும் பழவகை பயிர்கள் அதிக ஆரம்ப மூலதனத்துடன் வளர்க்கப்படுவது திராட்சை கொடியாகும். இவ்வாறு அதிகளவிலான ஆரம்ப செலவைக் கொண்டிருப்பதனால் திராட்சைக் கொடியில் ஏற்படும் நோய்களினால் பாதிப்பு அதிக மேற்பட்ட வாய்ப்புக்களுண்டு. பொதுவாகவே நோய்களை பயிர்ச்செய்கையாளர்கள் இதுவென அடையாளங்காண முடியாதிருப்பதனால் இவ்வாறான பூஞ்சண நோய்கள் திராட்சையில் ஏற்படுவதனை விரைந்து இனங்கண்டு கட்டுப்படுத்த முடிவதில்லை. துகள் பூஞ்சண நோய்களை அவற்றின் ஆரம்ப நிலையில் குறிப்பாக தொற்றுதல் ஏற்படும் போது இலகுவில் இனங்காண்பது கடினம்.

நோய் பரவலடைந்து பாதிப்பு அதிகமாகும் போது துகள் பூஞ்சண இழைகள் வெளித்தெரிய ஆரம்பிக்கும் போதே பயிரில் பூஞ்சண தொற்றுதலை உணர முடிகின்றது. இந்நிலையை பூஞ்சண தொற்றுதல் முழுமையாக ஏற்பட்டதற்கான அறிகுறியாகவே காணமுடியும். எனவே துகள் பூஞ்சணத்தின் தொற்று விடயத்தில் எங்களூர் திராட்சை செய்கையாளர்கள் மிகவும் உன்னிப்பாக அவதானித்து அவதானமாகச் செயற்படவேண்டும்.

### துகள் பூஞ்சணங்கள் இருவகை

திராட்சையில் ஏற்படும் துகள் பூஞ்சண நோய்கள் இருவகைப்படும். ஒன்று கீழ் துகள் பூஞ்சணம் (Downy Mildew), மற்றையது மேல் துகள்கள் பூஞ்சணம் (Powdery Mildew). இவ்விரண்டினையும் வேறு பிரித்தறிவது திராட்சை செய்கையாளர்கள் மட்டத்தில் இலகுவானதல்ல. ஆனால் இவ்விரு பூஞ்சணங்களுக்கும் உருவாக்கும் வித்திகள், நோயுருவாகும் தன்மை மற்றும் பூஞ்சணம் பெருகி வெளித்தெரியும் நிலை இவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்நோய் பற்றி கற்றுத் தேர்ந்தவர்களால் இலகுவாக இனங்கண்டுவிட முடியும்.

இதற்கான ஒளி நுணுக்குக்காட்டி ஒன்றினது உதவி தேவையாயிருக்கும். இருப்பினும் இவ்வாறான உபகரணங்களின்றி திராட்சைத் தோட்டத்திலே பூஞ்சண நோய்களை திராட்சைக் கொடியிலேற்படுத்தும் அறிகுறிகளை வைத்து இனங்காணுதலை தொடர்ந்து திராட்சை செய்கையாளர்களின் நன்மை கருதி தரப்பட்டுள்ளன.







### கீழ்துகள் பூஞ்சணம் (Downy Mildew)

உலகம் முழுவதுமாக பயிரிடப்படும் திராட்சைக் கொடியில் கீழ்துகள்கள் பூஞ்சணம் பரந்துபட்ட அளவில் நோயுருவாக்கும். அநேகமாக திராட்சைக் கொடியின் தரை மேற்பகுதியிலுள்ள தாவர பாகங்களில் இப்பூஞ்சணத்தின் தொற்று காணப்படும். குறிப்பாக மேற்பக்க இலையில் மெல்லிய பச்சைநிறத்தில் ஆரம்பித்து பின்னர் படிப்படியாக ஏனைய பகுதிகளுக்கும் இப்பூஞ்சணம் பரவும். இலையின் கீழ்ப்பக்கத்தில் வெண்ணிறத்தில் துகள்கள் போன்று பூஞ்சணம் அபிரிவிதமாக வளர்ந்திருப்பதனை அவதானித்தால் அதன் மூலம் கீழ்துகள் பூஞ்சணத்தை அதன் தொற்றுதலை இலகுவாக இனங்காண முடியும்.

திராட்சையில் தொற்றுதலாகி நோயேற்படுத்தும் பூஞ்சணத்திற்கு **பிளாஸ்மாபாரா விற்றிக்கோலா** (Plasmapara viticola) எனப் பெயரிட்டிருக்கின்றனர்.

பூஞ்சணத்தின் பரவல் இலைகளில் அதிகமாகும் போது திராட்சைக் கொடியின் இலை மஞ்சளாக மாற்றுதலடைந்து காய்ந்து இறுதியில் கொடியிலிருந்து உதிரத் தொடங்கும். (தொடரும்)

---

*ஜனாதிபதியுடனான பேச்சு தோல்வி*

## தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் ஆசிரியர் சங்கங்கள் தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுவார்த்தையில் எந்தவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லையென தெரிவித்துள்ள பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கங்களின் சம்மேளனம் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிடமாட்டோமெனவும் குறிப்பிட்டுள்ளது.

கல்வித்துறைசார் ஊழியர்களின் சம்பளப்பிரச்சினையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். இருப்பினும் இதற்கான எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லையென பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கங்களின் சம்மேளத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி கூறினார்.

ஜனாதிபதிக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கங்களின் சம்மேளன உறுப்பினர்களுக்கும் இடையிலான மற்றுமொரு சந்திப்பு எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார். (எ-1)

## நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் அணிசேரா நாடுகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் அணிசேரா நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

இந்தோனேஷியாவின் பாலி தீவில் அணிசேரா நாடுகள் அமைப்பின் வெளிவிவகார அமைச்சர் மாநாடு 16 தடவையாக நடைபெறுகின்றது. இந்த மாநாட்டில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கலந்து கொண்டுள்ளார்.

உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இலங்கை நிலைமை மற்றும் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்து வருவதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எகிப்து மற்றும் ரோமானியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து வெளிவிவகார அமைச்சரும் பிரதி வெளிவிவகார அமைச்சரும் விளக்கமளித்துள்ளனர். உறுதிப்படுத்தப்படாத தகவல்களின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பாடசாலை அதிபர்களுக்கும் இராணுவப் பயிற்சி

### கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை அதிபர்களின் செயற் திறனை அதிகரிக்கும் வகையில் அவர்களுக்கும் எதிர் வரும் நாட்களில் இராணுவப் பயிற்சியினை வழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

கொழும்பு இசிபத்தனை தேசிய பாடசாலையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கல்வியமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

பாடசாலை அதிபர்களின் செயற்றிறன் அதிகரிக்கப்பட்டால்தான் பாடசாலைகளின் கல்வித்தரம் அதிகரிக்கும். அதனை நோக்காகக் கொண்டு பாடசாலை அதிபர்களுக்கும் மூன்று மாத இராணுவப் பயிற்சியொன்று மிக விரைவில் வழங்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் மட்டுமன்றி பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகளும் கூட செயற்றிறன் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

பாடசாலை மதிலால் ஏறிப்பாய வேண்டிய சந்தர்ப்பமொன்றை எதிர்கொண்டால் அதனையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும். மாணவர்கள் அங்கும் இங்குமாகத் ஒளித்துத் தப்பியோட முனையும் போது அவர்களை விரட்டிப் பிடிக்கக்கூடியவர்களாக அதற்கான உடற்தகுதி கொண்டவர்களாக அதிபரும் ஆசிரியர்களும் இருக்க வேண்டும்.

அதற்கென முதற்கட்டமாக ஆயிரம் பாடசாலைகளின் அதிபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இராணுவத்தினரின் மேற்பார்வையின் கீழ் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

அவர்களுக்கான பயிற்சிகள் ரண்டம்பை இராணுவ முகாமில் வைத்து வழங் கப்படும் என்றும் கல்வியமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின் மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை புத்தூர், வாதரவத்தை, வீரவாணி, ஆவரங்கால், ஊறணி ஆகிய இடங்களிலும்,நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ச)

# மின்னல் தாக்கியதில் 17 மாணவர்கள் பாதிப்பு

காலி மாவட்டத்தில் பெந்தோட்டையிலுள்ள பாடசாலையொன்றின் கட்டடத்தை மின்னல் தாக்கிய போது குறைந்த பட்சம்17 மாணவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

பெந்தோட்டை, எலகத்தா மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கு பிள்ளைகள் வகுப்பறையிலிருந்த போது மின்னல் தாக்கியது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் களுத்துறை நாகொட பொதுவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். பாடசாலையின் மின்சுற்றுக்கள் அழிந்து போனதாக காலி மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ மையத்தின் இணைப்பாளர் கேணல் ரணசிங்க கூறினார். மாணவர்கள் அதிர்ச்சிக்குள்ளான போதிலும் அவர்களில் எவருக்கும் காயம் ஏற்படவில்லையென அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# உணவட்டுன-ஹிக்கடுவ கடற்கரைப் பிரதேசங்கள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிப்பு

உணவட்டுன மற்றும் ஹிக்கடுவ கடற்கரைப் பிரதேசங்கள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. குறித்த கடற்கரைப் பிரதேசங்களில் தனியாருக்கு சொந்தமான படகுகள் பயணம் செய்ய முற்று முழுதாக தடை விதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் முருகைக்கல் வளத்தை பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு கடற்கரைப் பிரதேசங்களும் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டமை தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி வெளியிடப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடற்கரைப் பிதேசத்திற்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள் பிரதேச இயற்கை வளத்திற்கு தீங்கு ஏற்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவு தனியார் படகுகள் சேவையில் ஈடுபடுவதனால் முருகைக்கல் பாறைக்கு தேசம் ஏற்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. படகுகள் பயன்படுத்துவதற்கு ஒரு பகுதி ஒதுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை 43 சதவீதத்தால் அதிகரிப்பு

இலங்கை வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் வேகமாக அதிகரித்து வருதாகவும் கடந்த காலாண்டுப் பகுதியில் முன்னைய வருடத்தை விட வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை 43 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

குறிப்பிட்ட காலாண்டுப் பகுதியில் முழு ஆசியாவிலும் உல்லாசப் பிரயாணத்துறை 5 சதவீத வளர்ச்சியையே கொண்டுள்ளது. இதே காலப் பகுதியில் இலங்கை 43 சதவீத வளர்ச்சியை எட்டிப்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும். (ஸ்ரீ-2)

# மோட்டார் வாகன பரீட்சகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் II ஆம் வகுப்பின் 'ஆ' பகுதி மோட்டார் வாகனப் பரீட்சகர்களை மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படவுள்ளது.

கொழும்பில் மாத்திரம் நடைபெறும் இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாக இருப்பதோடு விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகும் இருத்தல் வேண்டும்.

அத்தோடு மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை வறாடி தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல், பொறிமுறை எந்திரவியல், தானாகவியங்கி டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். அல்லது தேசிய பயிலுநர் மற்றும் கைத் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் எந்திரவியல் விஞ்ஞானம், பொறிமுறை எந்திரவியல், தானாகவியங்கி தேசிய டிப்ளோமா அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்பவியல், பொறிமுறை எந்திரவியல், தானாகவியங்கி டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். அல்லது வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளபடி அதற்கு இணையான ஏதாவது ஒரு டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

தொழில்சார் அனுபவமாக வாகனத்திருத்துநர் துறையில் குறைந்தபட்சம் 2 வருட மேற்பார்வை அனுபவமும் சகல மோட்டார் வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையயாளர் நாயகம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், இல.341, எல்விட்டிகலமாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு -05 என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

இப்போட்டி பரீட்சை பற்றிய மேலதிக விபரங்களை நேற்றைய தினம் வெளியான வர்த்த மானிப் பத்திரிகையிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிட முடியும். (ஸ்ரீ-4)

2011.05 28

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



★ 1503-ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது. இது 10 ஆண்டுகளில் முறிந்தது.

★ 1588-30ஆயிரம் பேர்களுடன் ஸ்பானிய ஆர்மாடா எனப்படும் 130 ஸ்பானியக் கப்பல்கள் பிரித்தானியக் கடற்படையினருடன் மோதும் பொருட்டு ஆங்கிலக் கால்வாயை நோக்கிய பயணத்தை லிஸ்பனில் இருந்து ஆரம்பித்தன.

★ 1737-வீனஸ்கோள் மேர்க்குரி கோளின் முன்னால் கடந்ததை ஜோன் பேவிஸ் என்ற வானியியலாளர் அவதானித்தார்.

★ 1905-ரஷ்ய- ஜப்பானியப் போர்: சூஷிமா என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ரஷ்யக் கடற்படையின் பால்ட்டிக் பிரிவு ஜப்பானியர்களால் அழிக்கப்பட்டது.

★ 1915- இலங்கையின் கண்டி யில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலவரம் ஆரம்பித்து ஜூன் 5 இல் முடிவுக்கு வந்தது.

★ 1937-கலிபோர்னியாவில் கோல்டன் கேட் பாலத்தை பிராங்கிளின் ரூஸ்வெல்ட் அதிகாரபூர்வமாக திறந்து வைத்தார்.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: பெல்ஜியம் ஜேர்மனியிடம் சரணடைந்தது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: நாசிகள் தமது சகாவான ரைன்ஹார்ட் ஹைட்ரிக் படுகொலை செய்யப்பட்டமைக்குப் பதிலடியாக செக்கோசிலவாக்கியாவில் ஆயிரத்து 800 பேரைப் படுகொலை செய்தனர்.

★ 1958-இலங்கை இனக்கலவரம் 1958 இலங்கையின் ஆளுநர் சேர் ஒலிவர் குணதிலக அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

★ 1964-பாலஸ்தீன விடுதலை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

★ 1974-வட அயர்லாந்தில் அதிகாரப் பரவலாக்கம் குறித்த சன்னிங் டேல் உடன்பாடு முறிந்தது.

★ 1987-மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த 19 வயது மத்தாயஸ் றஸ்ட் சிறிய ரக விமானம் ஒன்றில் மொஸ்கோவில் செஞ்சதுக்கத்தில் தரையிறங்கினார். உடனடியாகக் கைது செய்யப்பட்ட இவர் 1988 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13 இல் விடுவிக்கப்பட்டார்.

★ 1991-எதியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவை எதியோப்பிய மக்கள் புரட்சி சனநாயக முன்னணியினர் கைப்பற்றினர். எதியோப்பிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1995-ரஷ்யாவின் நெஃப்டிகோர்ஸ்க் நகரில் இடம்பெற்ற 7.6 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1998-பாகிஸ்தான் ஐந்து அணுவாயுதச் சோதனைகளை நிகழ்த்தியது. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சில நாடுகள் பாகிஸ்தானுக்கெதிராக பொருளாதாரத் தடைகளை அறிவித்தன.

### பிறப்புக்கள்

★ 1923-என்.டி.ராமராவ், இந்திய நடிகர், அரசியல்வாதி (இ.1998)

★ 1980-ம.சிவசுப்பிரமணியன், தமிழ் எழுத்தாளர்.

### இறப்புக்கள்


★ 1884-சாமுவேல் ஃபிஸ்க் கிறீன், தமிழ் மருத்துவ முன்னோடி, அமெரிக்கக் கிறிஸ்தவ ஊழியர் (பி.1822)

★ 1972-எட்டாம் எட்வேர்ட், ஐக்கிய இராச்சியத்தின் முடி துறந்த மன்னர் (பி. 1894)

### சிறப்பு நாள்

★ அசர்பைஜான், ஆர்மீனியா நாடுகளின் குடியரசு தினம்.

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 08

"சில அபூர்வமான சக்திகள் கைவரப்பெறும் என்று ஒரு மாந்திரிகர் சொன்னதை நம்பி தன் மகளையே பலி கொடுக்கத் துணிந்தான் ஒரு தகப்பன். பெற்றவளோ, தன் கணவனுக்கு எதிராகப் பொங்கி ஏழுந்து புகார் கொடுத்தாள் என்று செய்தி படித்தேன். அவளுடைய சாட்சியத்தின் பேரில் அவனுக்கு நீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கினால் கணவனைக் கொன்ற பாவம் அவளைச் சேராதா?"

மூட நம்பிக்கைகளை ஆதரிக்கும் மாந்திரீகங்களை கடுமையாக எதிர்த்து வந்த ஒருவன் மரணப் படுக்கையில் இருந்தான். புகழ் பெற்ற மாந்திரீகரை அழைத்து "இன்னும் சில நாட்கள்தான் உயிர் வாழ்வேன் அதற்குள் என்னை முழுமையான மாந்திரீகனாக மாற்ற முடியுமா?" என்று கேட்டான். அதற்கு அவன் கொடுக்கத்தயாராக இருந்த தொகை மாந்திரீகரை மயக்கியது.

அடுத்த சில நாட்களில் மாந்திரீகத்தின் அத்தனை சூட்சுமங்களையும் அவனுக்குச் சொல்லித்தந்தார்.

அவர் "இப்போது நீ முழுமையான மாந்திரீகன் ஆனால் எனக்கொரு சந்தேகம். வாழ்நாள் முழுவதும் மாந்திரீகத்தை எதிர்த்தாய் மரணத் தறுவாயில் கற்றிருக்கிறாயே, எதற்காக?" என்றார்.

"என்மரணத்தால் இந்த உலகில் ஒரு மாந்திரீகனின் எண்ணிக்கை குறையும். அதற்கு இணையான திருப்பதி வேறு இல்லை!" என்றான் அவன்.

முட்டாட்தனமான நம்பிக்கைகளுக்காக மகளையே பலி கொடுக்கத் துணிந்த கணவனை எதிர்த்து நின்ற அப்பெண்ணின் துணிச்சலை நான் பாராட்டுகிறேன்.

பொதுவாக நான் மரணதண்டனையை ஆதரிப்பதில்லை. சட்டத்துக்கு எதிராக கொன்றால் என்ன? சட்ட பூர்வமாகக் கொன்றால் என்ன? பெரிய வித்தியாசம் இல்லை. உயிருக்கு உயிர் என்று இன்னொரு உயிரை எடுப்பதில் எனக்குச்சம்மதம் இல்லை.

சிறைவாசம் ஒருவனை திருத்தி சமூகத்துக்கு ஏற்றவனாக வெளியனுப்பும் என்று நம்பக்கூடிய சந்தர்ப்பங்களில் அவனுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் சில சந்தர்ப்பங்களில் சிலருக்கு எதிராக மிகக் கடுமையான தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

"முக்கியமாக முட்டாட்தனமாக நம்பிக்கைகளுக்காக அப்பாவிக் குழந்தைகளை கொடூரமாகக் கொல்பவனை வெறும் சிறைத்தண்டனையோடு எப்படி விடமுடியும்?"

ஏதேதோ தலைவர்களின் பிறந்த நாள்களை முன்னிட்டு தண்டனைக் காலம் முடிவதற்குள்ளேயே அவன் வெளியே வந்து சுதந்திரமாதக உலவக்கூடும். இது மேலும் சிலருக்கு, இது போன்ற மூடநம்பிக்கைகளுக்காக பிற உயிர்களை பலிகொடுக்கும் துணிச்சலைத் தரலாம். அது சமூகத்திற்கு மிகப்பெரிய ஆபத்தாதக மாறிவிடும்.

"அப்படிப்பார்த்தால் பெற்ற குழந்தைகளை குப்பைத்தொட்டியில் எறிந்துவிட்டு போகும் பெண்களையும் குற்றவாளிகளாகத்தானே பார்க்க வேண்டும். அவர்களுக்கும் தண்டனை வழங்கவேண்டும் அல்லவா?"

டெல்லியில் ஒரு சம்பவம் தனக்குப்பிறந்த குழந்தையின் இதயத்தில் ஓட்டை இருக்கிறது என்றும் அதை

## சுட்டுக் கொல்லப்பட வேண்டியவர்கள்!

சரிசெய்ய பெரியதொகை செலவாகும் என்றும் ஒரு தாய் அறிய வந்தபோது கலங்கிப்போனாள். பொருளாதார ரீதியில் அவளால் எதுவும் செய்யமுடியாத நிலை. பெற்றகுழந்தையின் மரணத்தை எதிர்கொள்ளத்தைரியம் இல்லாமல் மருத்துவமனையிலேயே அதைப் போட்டுவிட்டுப் போய்விட்டாள்.

கவனிப்பாரின்றி ஒரு குழந்தை இப்படி நடை ப தையிலோ, குப்பைத் தொட்டியிலோ அநாதரவாக எறியப் படுவது குற்றம்தான். ஆனால் அதன் பின்னால் ஒரு தாயின் இயலாமை இருக்கிறது. இப்படிப்பட்ட குற்றங்களை சட்டம் கருணை கொண்டு பார்க்கவேண்டும். ஆனால் மூடத்தனமான சில நம்பிக்கைகளுக்காக குழந்தைகளைப் பலிகொடுப்பவர்களை சட்டம் ஒரு போதும் மன்னிக்கத்தேவையில்லை.

பெண்சிசுக்கள் வேண்டாம் என்று பிறந்ததுமே, அவற்றின் மூச்சை நிறுத்தும் தாய், தந்தையர் இன்றைக்கும் இருக்கிறார்கள். எதிர்க்க வலுவில்லாத சிறுமிகளைப் பாலியல் பலாத்காரம் செய்து, கொடூரமாகக் கொன்று புதைக்கும் வக்கிரகுணம் கொண்டவர்கள், இருக்கிறார்கள். 21ஆம்நுற்றாண்டில் இதெல்லாம் நடப்பது நம்தேசத்திற்கே அவமானம்!

இதுபோன்ற சூழ்நிலைகளில் கடுமையான நடவடிக்கை எடுக்கத்தவறினால், பலநூறு ஆண்டுகளுக்கு இப்படிப்பட்ட கொடுமைகள் தொடரத்தான்செய்யும்.

நூறுபேரை நடுவீதியில் நிற்க வைத்து சுட்டால்தான் இது முடிவுக்குவரும் என்றால், அப்படிப்பட்ட நூறுபேரைச் சுடுவதற்கு நான் தயங்காமல் ஆதரவு தெரிவிப்பேன். தங்களுக்கு அமுதம் கிடைக்கும் என்று நம்பி, பிறருக்கு விஷம் கொடுப்பவர்கள் இப்பூமியில் இருந்து களையப்பட வேண்டியவர்களே!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலக்கியத்தில் இணைந்த நண்டு

## 02

சங்க இலக்கியங்களிலும் நண்டினைச் சமையல் செய்து சாப்பிட்டிருக்கிறார்கள். அது வெள்ளை வெளேர் என்ற அரிசிச் சோற்றோடு நண்டுப்பிரட்டல் என்பதாக இருந்திருக்கிறது.

பிடிக்கை அன்ன பின்னு வீழ் சிறு புறத்து
தொடிக்கை மகடுஉ மகமுறை தடுப்ப
இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த
அவைப்பு மாண் அரிசி அமலை வெண் சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்

*(சிறுபாணாற்றுப்படை:195)*

சங்ககாலத்து சமையல்ப்பாணி அது. நண்டை அக்காலங்களில் ஞெண்டு, இதலையிலி, சிரமிலி, அலவன், கவைத்தாள், நீலக்காலி, வானரப்பகை என்றெல்லாம் அழைத்திருக்கிறார்கள்.

கடற்கரை ஓரத்துக்காட்சியொன்றை இலக்கியம் ஒன்று இப்படிச்சொல்கிறது. கடற்கரை ஓரத்தில் கருமைநிறமான நாவற் பழங்கள் வண்டு கணக்காய் உருண்டு திரண்டு விழுந்து கிடக்கின்றன. அவற்றைச் சுவைப்தற்காக வண்டுகள் அவற்றை மொய்த்துக் கிடக்கின்றன. இரைதேடி கடற்கரைப் புறங்களுக்கு வருகின்றன நண்டுகள். வண்டுகள் எல்லாம் நாவல் பழங்களாகத் தெரிகின்றன அந்த 360 பாகையும் சுழலும் நண்டின் கண்களுக்கு. அதனால் விரைந்தோடி வந்து வண்டு களை நாவல்ப் பழங்கள் என நினைத்து கடிக்கின்றன. இதனால் வண்டுகள் செட்டைகளை அடித்து ரீங்காரம் செய்கின்றன. அவை காதுகளுக்கு யாழோசை போலத் தெரிகிறது. இந்த நேரம் தக்கதருணம் என்று நினைத்து நாரைகள் நண்டுகளை உண்பதற்காக பறந்தோடி வருகின்றன. நாரைகளுக்குப்பயந்து நண்டுகள் தப்பிக்க, கடலுக்குள் ஓடி ஒளிந்து விடுகின்றன. என்று ஒரு காட்சியை படம் பிடித்துக் காட்டுகிறார் அம்மூவனார் என்ற புலவர். நற்றிணையில் 35ஆவது பாடலாக இது வருகிறது.

உள்ளுறை உவமையாக வைத்து பாடப் பட்டிருக்கும் இப்பாடல் மறைமுகமாக வேறு ஒரு பொருளை தாங்கி நிற்கின்றது. நாவல் தலைவியாகவும் வண்டு தோழியாகவும் நண்டு பெற்றோராகவும் நாரை தலைவனாகவும் ஒப்பிட்டுப் பார்த்தால் அதற்குள் இன்னொரு கதை ஒளிந்திருப்பது புலனாகும்.

இவ்வாறு இயற்கையோடு இயைந்த வழியில் அவர்கள்– சங்கத்து மக்கள் வாழ்வு நடத்தியதால் அவர்களது கற்பனைகளும் இயற்கையோடு அண்டியதாகக் காணப் பட்டது.

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

இன்னுமொரு நண்டுப்பாடல்! அது ஒரு குறுந்தொகைப்பாட்டு பரணர் என்பவர் பாடி இருக்கின்ற 24 ஆவது பாட்டு அது. அது ஒரு சமூக இயல்பைச் சித்தரிக்கும் ஒரு பாட்டு. வருகிறேன் என்று சொல்லிவிட்டுப்போன தலைவன் இன்னும் வரக்காணோம். தலைவி ஆற்றாமையில்– பிரிவுத்துயரில் கலங்கி நிற்கிறாள். என்ன ஆச்சு ஏதாச்சு என்று ஒன்றும் புலப்படவில்லை. ஊரார் அலர் பேசத் தொடங்கி விட்டார்கள். அலர் என்றால், பெண்கள் ஊர்ப்புதினம் பேசுதல். இந்தப் பெண்ணைப்பற்றி ஒரு செய்தி தெரியுமோ உனக்கு என்று ஊர் பேச்சுப்பேசுவதில் பெண்களுக்கு ஒருவித அலாதிப்பிரியம். தாடையில் விரல் வைத்து ஒருத்தி, மற்றவள் காதருகே இரகசியம்பேச மற்றவள் விழியுருட்டி காதை அருகில் கொண்டு சென்று ஆர்வமாக ஒரு வித பாவனையோடு கேட் பாளே அதுபோல் அலர் பேசத் தொடங்கி விட்டார்கள் இந்தப்பெண்ணைப்பற்றி. அவன் இன்னும் வரவில்லையாம் என்று கதை சுவாரிசியமாக நடக்கிறது.

அது எது போல இருக்கிறதென்றால் ஏழு நண்டுகள் அதாவது56 கால்கள், முதிர்ந்து கனிந்து விழுந்து கிடக்கின்ற அத்திப் பழத்தினை உழக்கி துவம்சம் செய்வதைப் போல இருக்கின்றனவாம். இங்கு நண்டுகளின் கால்கள் பெண்களின் நாக்குகளுக்கு ஒப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. அத்திப்பழமாக பிரிவாற்றாமையோடு இருக்கும் பெண்ணின் நிலை வர்ணிக்கப்படுகிறது. ஊரார் பேச்சும் அதன் வலியும் உழக்கி துவம்சம் செய்யப் படுவதற்கு ஒப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. என்ன அழகான உவமை பார்த்தீர்களா? அந்தப் பாடல் இதுதான்..

**கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்**
**என்னை இன்றியும் கழிவது கொல்லோ**
**ஆற்றயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து**
**எழுகுளிர் மிதத்த ஒரு பழம்போலக்**
**குழையக் கொடியோர் நாவே**
**காதலர் அகலக் கல்லென்று அவ்வே**

இதே நண்டுகளை இலக்கிய அந்தஸ்துக்கு உயர்த்தியவர் எங்கள் நாட்டுக் கவிஞர் மகாகவி உருத்திரமூர்த்தி அவர்கள்.

"சிறுநண்டு மணல்மீது படம் ஒன்று கீறும்
சிலவேளை அதைவந்து கடல் கொண்டு போகும்"

என்று அவர்பாடியது கடலை நம்பியிருக்கின்ற மக்களின் வாழ்வியலை, அதன் நிச்சயமற்ற தன்மையினை மிக எளிமையாகவும் இயல்பாகவும் நண்டினை உவமைகாட்டி சொன்னமை காலந் தாண்டியும் நிலைத்திருக்கும். அதன் இலக்கியத்தரம் எப்போதும் நயந்து மகிழத் தக்கது. எக்காலத்துக்கும் பொருந்திப் போவது எளிமையான சொல்நயமும் பாடுபொருள் தாங்கிநிற்கும் சோக உணர்வும் என்றும் மனதை விட்டகலாதது.

**யசோதா பத்மநாதன்**
**அவுஸ்திரேலியா**

நண்டு ஒரு வினோதமான பிராணி. தனித்துவ இயல்பு கொண்டது. அதனை என்ன மாதிரியெல்லாம் இலக்கியமும் சமூகமும் பயன்படுத்தியிருக்ககின்றது; பயன்படுத்திக்கொண்டிருக்கிறது; என்று பார்த்தீர்களா? ஒவ்வொரு கவிஞர்களுக்கும் மனிதர்களுக்கும் அது ஒவ்வொரு விதமாக தோன்றியிருக்கிறது. உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?

(முற்றும்)

# முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகள் மந்த கதியில் இடம்பெறுகின்றன

## மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திப் பணிகள் மந்தகதியில் இடம்பெற்று வருவதாக மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் சீ.ஏ.மோகன்ராஸ் தெரிவித்துள்ளார்.

போதியளவு போக்குவரத்து மற்றும் மனித வளங்கள் இன்றி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் வடக்கின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பீடு செய்யும்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தில் பணிகள் மிகவும் மந்த கதியில் இடம்பெற்றுவருவதாகக் குறிப்பிட்டுள்ளார். பேருந்து வசதிகள் மிகவும் குறைவாகவே காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அதிகளவில் பேருந்துகளை போக்குவரத்தில் ஈடுபடுத்துமாறு இலங்கை போக்குவரத்து சபைக்கு விடுத்த கோரிக்கைகளுக்கு இதுவரையில் சாதக பதில் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் இரண்டு வைத்தியசாலைகளே காணப்படுவதாக சுட்டிக்காட்டிய அவர்;

முல்லைத்தீவு ஆதார வைத்தியசாலையில் மட்டுமே சத்திரசிகிச்சை உள்ளிட்ட வசதிகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

பிரசவத்திற்காக வரும் தாய்மார் வவுனியா அல்லது யாழ்ப்பாண வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட நிபுணத்துவம் சார் ஊழியப்படையின் எண்ணிக்கை மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். சிறந்த ஊழியப்படையின்றி மாவட்டத்தினை அபிவிருத்தி செய்ய முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## அரச அலுவலர்களின் இரண்டாம் மொழி தகைமையை மதிப்பீடு செய்யும் பரீட்சை

(பூநகரி)

அரச உத்தியோகத்தர்கள் இரண்டாம் மொழியில் பெற்ற தகைமையை மதிப்பீடு செய்யும் பரீட்சை இன்று மு.ப.9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை கிளிநொச்சி மாவட்டத்தில் இரு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவிருக்கும் இப் பரீட்சை கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் சிங்கள, தமிழ் அரச அலுவலர்களான 183 பேர் தோற்றவுள்ளதாக இப் பரீட்சைக்குப் பொறுப்பான கல்வித்திணைக்கள அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-84)

## கரைச்சி கோட்ட ஆங்கில தினப் போட்டிகள்

(பூநகரி)

கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த கரைச்சிக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் 28, 29 ஆம் திகதிகளில் கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கபட்ட நிகழ்ச்சி நிரலுக்கு மேலதிகமாக 28 ஆம் திகதி அன்று தரம் 3 இலிருந்து தரம் 13 வரை உள்ள மாணவர்களுக்கு ஆங்கில கவிதைப் போட்டி நடைபெறுமென கரைச்சிக் கோட்ட கல்விப் பணிப்பாளர் அ.அமுதலிங்கம் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-84)

# சர்வதேச சட்டங்களுக்கு முரணாக ஆஸியில் சட்டவிரோத குடியேற்றவாசிகள் தடுத்துவைப்பு

(கொழும்பு)

சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பான அவுஸ்திரேலியா பின்பற்றும் கொள்கைகளை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை விமர்சித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் கென்பரா நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த வருடத்தின் கடந்த காலப்பகுதியில் 900 இற்கும் அதிகமானவர்கள் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயற்சித்துள்ளனர்.

அவர்களுள் அதிகளவானோர் ஆப்கானிஸ்தான், ஈராக், ஈரான் மற்றும் இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

கடந்த வருடம் 6 ஆயிரத்து 535 பேர் 134 படகுகளில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிப்பதற்கு முயற்சி செய்துள்ளனர்.

எவ்வித குற்றச்சாட்டுக்களுமின்றி நீண்டகாலமாக சிலரை முகாம்களில் வைத்திருப்பது சர்வதேச சட்டங்களை மீறும் செயலாகும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை

### ஐ.நா.குற்றச்சாட்டு

தெரிவிக்கின்றார்.

சட்டவிரோத குடியேற்றவாசிகளின் நூற்றுக்கும் அதிகமானவர்களை மலேசியாவிற்கு அனுப்புவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பாக நவநீதம்பிள்ளை மற்றும் அவுஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கிலார்ட் ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# சனல்-4 தொலைக்காட்சிக்கு சர்வதேச மன்னிப்பு சபையின் விருது

## 3 ஆவது முறையாக வென்றுள்ளது

(கொழும்பு)

இவ்வாண்டிற்கான சர்வதேச மன்னிப்புச் சபையின் விருது சனல்-4 தொலைக்காட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதை சனல் -4 தொலைக்காட்சி 3 ஆவது தடவையும் வென்றுள்ளது.

இலங்கை குறித்த விவரணத்தை வெளியிட்டமையின் காரணமாகவே சர்வதேச மன்னிப்புச் சபையானது இந்த விருதை சனல்-4 இற்கும் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற கொடுமைகளை வெளிப்படுத்தியமை, பின்னர் வெளியிட்ட காணொளிகள் உண்மையானவை என நிரூபித்துள்ளமை என்பன இந்த விருது கிடைக்க மேலும் காரணிகளாக அமைந்துள்ளது என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

தென்சூடான், கொங்கோ நாடுகள் பற்றிய உண்மைத் தகவல்களையும் சனல்-4 வெளியிட்டமைக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. ஜொனத்தன் மில்லர், நிவினிமப்ரோ, சாரா கோப், கிரிஷ் ஜூனியா ஆகிய செய்தியாளர்கள் இலங்கை தொடர்பான பல செய்திகளை ஆராய்ந்து வெளியிட்டதாகவும் மற்றும் பெயர் குறிப்பிட முடியாத பலர் இலங்கைச் செய்திகளை வெளிக்கொண்டுவரப் பாடுபட்டதாகவும் சனல் -4 நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சிலரது பெயர்களை பாதுகாப்புக் கருதி நாம் வெளியிடவில்லை என்றும் இருப்பினும் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு விசா வழங்கும் நடைமுறையில் மாற்றம்

(கொழும்பு)

இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு விமான நிலையத்தில் வைத்து விசா வழங்குகின்ற நடைமுறை இலங்கையில் முடிவுக்கு வருகின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு பின் நாட்டிற்கு வரவுள்ள இந்திய சுற்றுலாப் பயணிகள் ஒன்லைன் மூலம் விசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும் அல்லது இலங்கைத் தூதரகத்திற்குச் சென்று விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

இப்புதிய நடைமுறை எதிர்வரும் 80 நாட்களுக்கு இடையில் அமுலுக்கு வந்துவிடும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்திய சுற்றுலாப் பயணிகள் மாத்திரமன்றி இன்னும் 78 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இப்புதிய நடைமுறைக்கு அமையவே விசா எடுக்க வேண்டியிருக்கும்.

சிங்கப்பூர், மலேசியா ஆகிய இரு நாடுகள் மாத்திரம் இலங்கைச் சுற்றுலாப் பயணிகளுக்கு விமான நிலையத்தில் விசா வழங்குகின்றன. எனவே சிங்கப்பூர் மற்றும் மலேசிய நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை தொடர்ந்தும் விமான நிலையத்தில் வைத்து விசா வழங்கும் என்று தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)


# வாழ்த்துகின்றோம்

## திரு. நாகலிங்கம் தனேந்திரன்



எந் நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வு இல்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு –

என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கிற்கு இணங்களமது கிராமத்தின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரும் சமய சமூக பொதுப்பணி என எத்துறையிலும் முன்னின்று செயற்பட்டு பெருமை தேடித்தந்தவரும் சனசமூக நிலையத்தின் உப தலைவரும், கிராம அபிவிருத்திச்சங்கம், வில்லூன்றி இந்து மயானம், யாழ்.பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் ஆகியவற்றின் தலைவரும், யாழ். பிரதேச கலாசார பேரவை உறுப்பினரும், சமாதான நீதிவானும், சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் யாழ்.நகரபிரதிப் பொறுப்பாளருமான எமது அன்பிற்குரிய **நாகலிங்கம் தனேந்திரன்** அவர்களிற்கு 'கலாநிதி ' என்னும் சிறப்புப் பட்டம் கிடைத்தமையையிட்டு இன்று 28.05.2011 சனிக்கிழமை எமது கொட்டடி சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படும் பாராட்டு விழா சிறப்புறவும் இத்தகைய ஒரு சிறந்த சேவையாளருக்கு இப்படி ஒரு நிகழ்வை எடுத்த நிலையத்தினருக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

5022

நண்பர்களும்,

கிராம மக்களும்.

# வேலூரில் வெம்பிய 'நாம் தமிழர்!'

# "காங்கிரஸ் கட்சியில் இருக்கவேண்டாம்!"



பொதுக் கூட்டத்தில்

பாதையைத் தேடாதே... உருவாக்கு! கம்பீரமாக பிரபாகரன் சிரித்துக்கொண்டு இருக்க, சிறுமி ஒருத்தி, 'வீர வணக்கம்... வீர வணக்கம்!' என்றபடியே நாம் தமிழர் கட்சிக் கொடியைப் பிடித்துப் பேரணியைத் துவக்க... வேலூர் கோட்டை கொஞ்சம் அதிர்ந்துதான் போனது.

வேலூரில் கடந்த 18ஆம் திகதி நாம் தமிழர் கட்சி சார்பாக இரண்டாம் ஆண்டு ஆரம்ப விழா மற்றும் தேர்தல் வெற்றி விழா நடைபெற்றது. ஈரோடை மாவட்டத்தில் இருந்து (ஈரோடு என்பது ஆங்கில வார்த்தையாம்) வந்தவர்கள் கையில் 'சந்தன' வீரப்பன் பதாகைகளைத் தாங்கி இருந்தனர். பேரணியில் தமிழர் கலையான சிலம்பாட்டம், புலியாட்டம், தப்பாட்டம் போன்றவை திருவிழா போல அசத்த, நடுவே ராஜபக்ஷ வேடத்தில் ஒருவர் செருப்பு மாலையுடன் நின்றார். ராஜபக்ஷ வேடம் அணிந்தவரை பேரணியில் அடித்தபடியே வந்தனர். ஒரு கட்டத்தில் உற்சாகமாகிப் போன சில தொண்டர்கள் உண்மையாகவே அடித்துவிட, அவர் வலியால் துடித்தது தனிக் கதை!

மாலை பொதுக் கூட்டம் ஆரம்பிக்கும் முன்பு, மழை வந்து குளிர்வித்துப் போனாலும் அனைவரின் பேச்சிலும் அனல் பறந்தது. இயக்குநர் செல்வமணி முதலில் மைக் பிடித்தார்.

"காங்கிரஸுக்கு யாரும் ஓட்டுப் போடாதீங்கன்னு எல்லோரும் கத்தினோம். அதற்கு நல்ல பயன் கிடைத்து உள்ளது. காங்கிரஸ் கட்சியில் இனி யாரும் இருக்க வேண்டாம் என்று பிரசாரம் செய்யப்போகிறோம். காங்கிரஸில் இருப்பவர்கள் அங்கே இருந்து ஓடிவிடுங்கள். ஏன்னா இப்ப உங்களுக்கு ஐந்து தொகுதிகள் கிடைத்திருக்கு அடுத்த தேர்தல்ல யாருக்கும் கட்டுப்பணம் கூட கிடைக்காது. ஒரு பேச்சுக்கு சொல்லுறேன்... தீ என்று சொன்னால் சுடாது. இப்ப நாம் பேசிக்கிட்டு இருக்கிற மேடையில் குண்டு வெடிச்சா என்ன ஆகும்? சீமான், நான், செல்வபாரதி, தீரன், சந்திரசேகர்னு எல்லோரும் மேல போக வேண்டியதுதான். ஆனா ராஜீவ் காந்தி இறந்தாரே... அப்ப அவர்கூட இருந்த 7பொலிஸ்காரர்க்ளும் 10 பொதுமக்களும்தான் இறந்தார்கள். அப்போது வாழப்பாடியார், மூப்பனார் எல்லாம் எங்கே இருந்தார்கள்? குண்டு வெடிப்பது அவர்களுக்கு முன்கூட்டியே தெரியுமா? உண்மையை எப்பவும் மறைக்க முடியாது. சிறையில் இருக்கும் என் தம்பி, அக்காமார்களை விரைவில் விடுதலை செய்... இல்லை என்றால் , நாங்களும் வருகிறோம். சிறைச்சாலையைத் தயார் செய்..." என்று முடிக்க, கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

பேரணியில் சீமான்



பலரும் பேசி முடித்த பிறகு, ஆக்ரோஷத்தோடு வந்து நின்ற சீமான், "கடந்த ஆண்டு மே 18ஆம் திகதி மதுரையில் நாம் தமிழர் கட்சியை ஆரம்பித்தோம். அதற்கு முந்தைய ஆண்டு 2009 மே 18ஆம் திகதி ஈழத்தில், முள்ளி வாய்க்காலில் நம் தமிழ் சகோதர - சகோதரிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். ஒரு காக்கை இறந்தால், அந்த காக்கை இனம் கூடிக் கரையும். ஒரு தெரு நாய் இறந்தால், அந்தத் தெரு முழுக்கக் குரைத்தபடி திரியும். தமிழ்நாட்டில் எத்தனை பேர் தொலைக்காட்சியில் பார்த்து இருப்பார்கள்? எல்லோரும் மானாட மயிலாடவும், நாயாட நரியாடவும் தான் பார்த்தார்கள்.

இந்தக் கூட்டம், வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் போடப்பட்ட கூட்டம் அல்ல. தமிழர்களின் இரத்தம் குடித்த கூட்டத்தை விரட்டி அடிக்கப் போடப்பட்ட கூட்டம். பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகளைப் பார்த்துக் கேட்கிறேன்... பதவி ஆசையில் நம் இனத்தை அழித்தவனிடம் போய் நீங்கள் மண்டியிட்டீர்களே... இப்போது மக்களின் தீர்ப்பு எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? நடந்து முடிந்தது தேர்தல்களம் அல்ல... அது ஒரு யுத்த களம்! ஐந்து தொகுதியில் ஜெயித்ததை நினைத்துக் கொக்கரிக்காதீர்கள். அந்த ஐந்து தொகுதிகளுக்கு வர. எனக்கு நேரம் இல்லை. உங்களை வேரோடு அழிக்கும் வரை நான் ஓயப்போவது இல்லை. தி.மு.க. தனது வரலாற்றில் எதிர்க் கட்சி அந்தஸ்தை இழந்து உள்ளது. மறுபடியும் நீங்கள் கூட்டணி வைத்தால் 23 ஸீட்டுகள் இல்ல. மூணு ஸீட்டுக்கள் கூட வாங்க முடியாது. மேலும், சாதி அரசியலை வைத்து இனி எவனும்தமிழ்நாட்டில் அரசியல் பண்ண முடியாது.

ராஜபக்ஷ, சோனியா, மன்மோகன் சிங், ராகுல் காந்தி, கருணாநிதி போன்ற எல்லோரும் நம் தமிழ் இன மக்கள் கொடுமையாகச் சாகக் காரணமாக இருந்தார்கள். அவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் ஏற்றுவதே நாம் தமிழர் கட்சியின் முடிவு. இது கூடிய விரைவில் நடக்கும்!" என சீமான் பேச்சு முழுக்க அனல் பறந்தது.



வீரப்பனின் பதாகையுடன்...

வலி இருந்தால்தானே வார்த்தைகளில் தீப்பறக்கும்!

**கே.ஏ.சசிகுமார்**

# சுன்னாகம் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் 2 இலட்சத்து 2500 மி.லீ. சாராயம் கைப்பற்றப்பட்டது



(சுன்னாகம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் சிந்திக பண்டாரவிற்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை மூலம் 750 மில்லி லீற்றர் சாராயம் அடைக்கப்பட்ட 240 போத்தல்களையும் 350 மில்லி லீற்றர் சாராயம் அடைக்கப்பட்ட 60 போத்தல்களுமாக 2 இலட்சத்து 2 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் சாராயம் கைப்பற்றப்பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பாக தரிய வருவதாவது, சுன்னாகம் நகரப் பகுதியில் வாகனம் ஒன்றில் சாராயம் வருவதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பொலிஸார் வாகனத்தையும் இரண்டு சந்தேக நபர்களையும் சாராயப் போத்தல்களையும் கைப்பற்றினர்.

மேற்படி சம்பவம் கடந்த 25ஆம் திகதி நண்பகல் நடைபெற்றது.

பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட சாராயம், வாகனம்,சந்தேக நபர்கள் அனைவரும் கடந்த 26ஆம் திகதி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டன.

வழக்கை விசாரித்த நீதிபதி ஜெகநாதன் கஜநிதிபாலன் தலா ஒருவருக்கு 85 ஆயிரம் ரூபா வீதம் இருவருக்கும்ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவைத் தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

மேற்படி அதிரடி நடவடிக்கையில் சுன்னாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் சிந்திக்க பண்டார தலைமையிலான பொலிஸ் பரிசோதகர் பிரதீப் நிசாந்த குமார, பொலிஸ் சாஜன்களான குலசூரிய தம்மிட, பொலிஸ் கொஸ்தாபல்களான குமார அபயசேகர, யுவராஜ் ஆகியோரடங்கிய பொலிஸ் குழு பங்குபற்றியது. (ஸ்ரீ)


## இலவச மருத்துவ சேவை

சாவகச்சேரி தென்னை, பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அனுசரணையுடன் யாழ்.மாவட்ட சித்த மருத்துவ கூட்டுறவுச் சங்கம் நடத்தும் இலவச மருத்துவ சேவை இன்று மட்டுவில் வடக்கு சந்திரபுரம் அம்பாள் சனசமூக நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும்.

இம்மருத்துவ முகாமில் பங்குபற்ற விரும்புவோர் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-52)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் மகேந்திரன் வரதன்



மூன்றாவது ஆண்டுகள் விழி நீரோடு அறுந்த
விருட்சமாய் ஒடிந்து நிற்கின்றோம்
இரக்கமில்லாமல் எமனுக்கு இரையாகினாய்
இன்னமும் எம் இதயங்களில்
வாழ்ந்து கொண்டிருக்கிறாய்
(வரதன் குட்டியே) உன் குறும்புகள் எம் மனதில்
என்றும் இருக்கிறதே
நீ பிரிந்த நிமிடத்தில் இருந்து நாமும் எம்மை
பிரிந்து போய்த் தவிக்கின்றோம் (வரதன் குட்டியே)
உன்னோடு சேர்ந்துதான் எங்களால் பயணிக்க முடியவில்லை
நாளும் பொழுதும் உன் நினைவுகளுடன் வாழ்கின்றோம்
எம் உயிர் இருந்து மடியும் வரை.

அன்னையின் மடியில் 1980.09.11

ஆண்டவன் அடியில் 2008.05.28

உம் பிரிவினை ஜீரணிக்க முடியாத
கதிரவேலு குடும்பம்
(மாமா, மாமி, அப்பா, அம்மா, அத்தான், அக்கா, ரஜீனா)

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

(5021)

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

## பரநிருபசிங்கம் தேவகுமாரி



வஞ்சமனத்தர் உன் வாழ்வதனை முடித்து
ஆண்டுகள் மூன்று அதற்குள் ஓடியதோ
நித்தம் உன் முகம் தான் நினைவில் வருகுதையா
அகலுமா உன் நினைவு மறையுமா உன் பிரிவு
நெஞ்சம் கனக்குதையா நிம்மதியும் போனதையா
என்றும் உன் நினைவில் மீளாமல் துடிக்கும்


பிறப்பு 15 . 07 . 1972


இறப்பு 28 . 05 . 2008

தாய்,
சகோதரர்கள்.

தில்லையம்பதி,
மூளாய் வீதி,
மாவடி, வட்டுக்கோட்டை.

(ஸ்ரீ-3304)





கோண்டாவில் அருள்மிகு தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தால் நடாத்தப்பட்ட பரிசளிப்பு விழா அண்மையில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் சு.முத்துலிங்கம் பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒருவருக்கு சைக்கிள் ஒன்றை வழங்குவதையும் பல்கலைக் கழக புகுமுக மாணவிக்கு பரிசளிப்பு அனுசரணையாளரான திருமதி குகேந்திரன் சுகிதா சைக்கிள் ஒன்றினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்.)

# ஐந்து இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் சனசமூக நிலையங்கள் புனர்நிர்மாணம்

## யாழ். மாநகரசபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் ஆளும் தரப்பு உறுப்பினரான மனுவல் மங்களநேசனின் இவ்வருடத்திற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் 4 சனசமூக நிலையங்கள் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

யாழ். மாநகர சபையின் இவ்வருடத்திற்கான 5 ஆவது மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி அரியாலை காந்தி சன சமூக நிலையத்திற்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

அத்தோடு அரியாலை திருமகள் சனசமூக நிலையம், நாயன்மார்கட்டு சனசமூக நிலையம், பாரதி சனசமூக நிலையம், நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையம் என்பவற்றுக்கு தலா 50 ஆயிரம் ரூபா செலவில் திருத்த வேலைகளும் செய்யப்படவுள்ளதாக தனது பிரேரணையில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதன்படி குறித்த சனசமூக நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஸ்ரீ-6)

# கொழும்பு-தூத்துக்குடி பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் தாமதம்

(கொழும்பு)

கொழும்பு-தூத்துக்குடி இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கப்பல் போக்குவரத்து நேற்று ஆரம்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இலங்கை தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டதால் போக்குவரத்து ஆரம்பிப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் போக்குவரத்து இலங்கை தரப்பு பொறுப்பாளரான சிலோன் கப்பல் நிறுவனம் இதற்கு இரு காரணங்களைக் கூறியுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் இப்போது போர் வெற்றி நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதனால் அங்கு பல வீதிகள் மூடப்பட்டுள்ளன. இது தவிர கப்பல் போக்குவரத்து ஆரம்ப விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்றும் இந்தியாவில் இருந்தும் பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென்று இலங்கை ஜனாதிபதி விரும்புவ தால் ஆரம்ப விழா ஒத்திவைக்க கேட்டுக் கொண்டுள்ளோம் என்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஜுன் முதல் வாரத்தில் கப்பல் போக்குவரத்து ஆரம்ப விழா நடைபெறும் என்று தெரிகிறது. இந்த போக்குவரத்தை ஆரம்பிப்பதனால் வர்த்தகர்கள், ஆன்மீகயாத்திரை செல்வோர் என ஆண்டுக்கு சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தமிழகம் -இலங்கை இடையே பயணம் மேற்கொள்வார்கள் என்று தெரிகிறது.

முதற்கட்டமாக வாரத்தக்கு இருமுறை கப்பல் போக்குவரத்து நடைபெறும். பின்னர் தேவைக்கு ஏற்ப அதிகரிக்கப்படும். தூத்துக்குடி - கொழும்பு இடையிலான தூரம் 280 கடல் மைல்கள் ஆகும்.

சுமார் 10 முதல் 12 மணி நேரம் வரை பயணம் நீடிக்கும். சென்னையில் இருந்து கொழும்புக்கு விமானத்தில் செல்வதற்கான கட்டணத்தை விட 30 சதவீதக் கட்டணம் குறைவாக இருக்கும். மேலும் ஒருநபர் 80 முதல் 100 கிலோ வரையிலான பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக இராமேஸ்வரம்-தலைமன்னார் இடையே இந்த ஆண்டு இறுதியில் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

(ஸ்ரீ-2)

# யாழ். கல்விவலய கணனி வளநிலைய போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்விவலய கணனி வளநிலைய போதனாசிரியர் பதவிக்கு உரிய விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த ஆசிரியரி டமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மூன்று வருடத்துக்கு குறையாத சேவை, கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்ப பட்டம் அல்லது பட்டத்தில் பிரதான பாடமாக கணனி விஞ்ஞானம் அல்லது பல்கலைக்கழக பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒரு வருடத்திற்கு குறையாத கணனிக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருத்தல், கணனி மொழிகளில் தேர்ச்சியுடன் நிகழ்ச்சி திட்டங்கள் எழுதும் ஆற்றல் உடையவராக இருத்தல், க.பொ.த. சாதாரணதரத்தில் ஆங்கிலத்தில் C தரத்துடன் ஆங்கில மொழியில் புலமை பெற்றிருத்தல் அல்லது மொழி மூலத்தில் பட்டம் பெற்றிருத்தல், 55 வயதிற்கு குறைந்தவராக இருத்தல், குறைந்தது 5 வருடகாலம் இடமாற்றம் கோராது சேவையாற்றக் கூடியதாக இருத்தல் போன்ற தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை கல்வி அபிவிருத்தி பிரிவு வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 14.06.2011 க்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (ஸ்ரீ)

# கராத்தே போட்டி

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடாத்தப்படும் மாவட்டங்களுக்கிடையிலான கராத்தே போட்டி இன்று சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இதில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் பங்கு பற்றவுள்ளனர்.

இதில் ஆண்களுக்கான எடைப் பிரிவுகளாக 50 கி.கி கீழ், 55 கி.கி. கீழ், 60 கி.கி. கீழ், 67 கி.கி. கீழ், 75 கி.கி.கீழ், 84 கி.கி. கீழும் அதற்கு மேலும் எனவும் பெண்களுக்கான எடைப்பிரிவுகளாக 50 கி.கி. கீழ், 55 கி.கி. கீழ், 61 கி.கி. கீழ், 67 கி.கி.கீழும் அதற்கு மேலும் எனவும் நடைபெறவுள்ளது குமித்தே மற்றும் காட்டாப் போட்டிகள் நடைபெறுகின்றன. (ஸ்ரீ-2)

# செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான வணிகப் போட்டி தொடர்பான செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வு தரம் 10, 11 வணிகக் கல்வியும், கணிக்கீடும், முயற்சியாண்மை பகுதியும் தரம் 12,13 வணிகக்கல்வி, கணக்கியல், பொருளியல் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல்களுக்கு சமுகமளிக்கும் ஆசிரியர்கள் பாடநூல், ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டிகள் ஆகியவற்றை தவறாது கொண்டு வருமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)


PATRICIAN INSTITUTES

பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

புதிய இலவச பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன

ஆரம்பம் :-06.06.2011

குறிப்பு :- போரில் பாதிக்கப்பட்ட, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகளுக்கு தகுதி அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்படும்.

பின்வரும் பயிற்சி நெறிகள் இலவசமாக வழங்கப்படும்.

1. COMPUTER COURSES (கணனி பயிற்சி நெறி)
2. Short Hand Typing (English) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
3. Short Hand Typing (Tamil) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
4. Sewing (தையல்)
5. General Moto Mechanism (மோட்டார் வாகனம் திருத்துதல்)
6. General Electrician (ஜெனரல் எலக்ரீஸன்)
7. Radio & T.V.Repairing (வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல்)
8. Lathe Machine Operation (கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
9. Arc Welding (மின் ஒட்டுநர் பயிற்சி)
10. Carpentry (மரவேலை)
11. Refrigeration and Air conditioning (குளிர்சாதனப் பெட்டி திருத்துதல்)

மேற்படி நிலையில் உள்ள பிள்ளைகளுக்கு 30.05.2011-01.06.2011 வரை எமது அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

நேரம் :- காலை 9.00-12.00 மணிவரை
இடம்:- பற்றீஷியன் தொழிற்பயிற்சி நிறுவனம்

பின்வரும் ஆவணங்களுடன் சமுகம் தரவும்
1. போரில் அல்லது வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மாணவர்கள் பங்குத் தந்தை அல்லது கிராம சேவகரின் அத்தாட்சிக் கடிதம்
2. கணனிப்பயிற்சி நெறி பெற விரும்புவோர் G.C.E (O/L) கல்விச் சான்றிதழ்

மேலதிக விபரங்களுக்கு:-

Register, Patrician Institute,
61(59),St.Patrick's Road,
Jaffna.
T.p:0212226148 Fax:-0212226148 Email:- spitee@sltnet.lk

(சி-3306)

தன்னுடைய புறத்தோற்றத்தில் காட்டும் அதே அளவு அக்கறையை, தனது நன் நடத்தையிலும் காட்டும் மனிதனைத்தான் இந்த உல கம் விரும்புகிறது. -கன்ஃபூஷியஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று கர்ப்பூரத் திருவிழா

வரலாற்றுப் புகழ்மிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று கர்ப்பூரத் திருவிழா. இந்தக் கோயில் கும்பாபிஷேக தினமான இன்று கந்தனுக்குத் திருக்கல்யாண வைபவத் திருவிழாவும் கர்ப்பூர ஒளியிலே கந்தனைக் கண்டு தரிசிக்கின்ற அற்புத நிகழ்வும் ஆனந்தமாக நடைபெறவிருக்கின்றன.

முருகன் என்றாலே அழகன். அந்த அழகன் முருகப் பெருமானுடைய ஆலயமாகிய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இன்று மணவாளக்கோல நன்னாள். நல்லூர்ச் சுற்றாடலே இன்று விழாக்கோலம் பூண்டு அழகிய திருநகராகக் காட்சி தருகின்றது.

பகல் ஆறுமுகனுக்கு சகஸ்ர சங்காபிஷேகம். பால், இளநீர், தேன், சர்க்கரை-பஞ்சாமிர்தம் முதலியவற்றால் வெகு சிறப்பான முறையில் அபிஷேகம் நடைபெறும். இந்த அழகிய அற்புத கோலாகலக் காட்சியைக் காண்பதற்குப் பூர்வஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

இன்று மாலை நடைபெறுகின்ற திருக்கல்யாண வைபவம் ஒரு கண்கொள்ளாக் காட்சி. ஆனந்த அருள்மிகு அழகன் ஆறுமுகனுக்கும் அவரது சக்திகளான ஸ்ரீவள்ளி, தெய்வானை அம்பிகை இருவருக்கும் சிறப்பாகத் திருக்கல்யாணம். இதுவரை திருமணமாகாத இளைஞர்களும் இளங்கன்னியர்களும் இந்த முருகப் பெருமானுடைய திருக்கல்யாண கோலாகலக் காட்சியைக் கண்டு தரிசித்து வணங்கினால் அவர்களுக்கும் விரைவில் திருமணமாகும் என்றொரு நம்பிக்கை தொன்றுதொட்டு நிலவி வருகின்றது.

தங்கப் பொன்னாபரணங்களால் தண்ணருள் பொழியும் தமிழ்க் கடவுள் முருகனின் அலங்கார அற்புதத் திருக்கோலம் வைத்த கண் எடுக்காமலே பார்க்கத் தூண்டும் பக்திப் பரவசமூட்டும் இனிய காட்சியாகும்.

திருமணம் முடிந்த பிற்பாடு அழகிய தங்கப் பீடத்திலே அமர்ந்து தனித்துவமான ஒரு பேரழகுப் பவனி வந்து அடியார்களுக்கு அருட்காட்சி கொடுப்பார் ஆறுமுகப் பெருமான். முன்னே மங்கள இசை-தவில் நாதம் ஒலிக்க, அன்பர்கள்



புடைசூழ, முகங்களிலே ஒளி வீசும் கர்ப்பூரத் தீபப் பிரகாசம் பட்டுத் தெறிக்க, ஐயன் திருவீதி வலம் வரும் அருட்காட்சி ரம்மியமானது.

ஆகவே, இன்று நல்லூரில் நடைபெறுகின்ற கர்ப்பூரத் திருவிழாவிலே முருகன் அடியார்கள் கலந்து கொண்டு மனிதப்பிறவி எடுத்ததன் பயனைப் பெறுவார்களாக.

சிவநெறிக்கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

# தோடுடைய செவியர்காள் உங்கள் இலட்சியம்தான் என்ன?

நாளுக்கு நாள் எங்கள் கலாசாரக் கோலங்கள் மாறிவருகின்றன. வெளிநாட்டு கலாசாரம் என்பதற்கு அப்பால் தென்னிலங்கையின் தாக்கமும் எங்கள் மீது மோதிக் கொள்வதை உணர முடியும்.

எதுவாயினும் எங்கள் தமிழினம் ஒன்றுதான் தனது உயர்ந்த கலாசாரத்தை மிக எளிதாக மறந்துவிடக் கூடியது என்பது நிரூபணமாகி விட்டது.

எங்கள் இளைஞர்களில் பெரும்பாலானவர்களின் ஆடை அலங்காரங்களை நினைக்கும் போது இலவசக் கல்வியின் பயன்பாடு தமிழர்களுக்கு பெரிதாக இல்லை என்று நினைக்கும் அளவிற்கு நிலைமை உள்ளது.

ஒரு இனத்தின் எதிர்காலம் என்பது அந்த இனத்தின் இளம் சமூகத்தின் கையில் உள்ளது என்பது பொதுவான முடிபு.

இந்த முடிபு சரியானது என. நாம் நினைத்திருந்த காலமும் இருந்தது.

ஆனால் அந்த நினைப்புகளெல்லாம் அடிபட்டுப்போக, இப்போது எல்லோரும் பதம்பார்க்கும் இனமாக நாம் மாறிவிட்டோம்.

கால அசைவில் நடந்த மிக மோசமான சதித்திட்டங்களுக்கு ஈழத் தமிழினம் இரையாகிப் போன துயரத்தின் மத்தியில் இன்றைய இளைஞர்களின் நோக்கம், இலக்கு, அவர்களின் அறிவியியல்சார் விடங்களை நோக்கும்போது வேதனை தாள முடியவில்லை.

எங்கள் இனத்தின் எதிர்காலம் எப்படியுள்ளது? அரசியலின் சமகால நிலைமை எமக்குச் சாதகமானதா? இதுபற்றி எமது இளம் சமூகம் சிந்திப்பதாக இல்லை.

இளம் சமூகத்தின் சிந்தனையிலும் அதன் கேள்வியிலுமே எங்கள் அரசியல் சமூக, பொருளாதார எழுச்சி தங்கியுள்ளபோதிலும், எங்கள் இளைஞர்கள் இப்போது ஒற்றை காதில் தோடு அணிந்துகொண்டு உச்சமான மகிழ்ச்சியில் திரிகின்றனர்.


கடவுளே! ஐ.நா. சபை முதல் உலக நாடுகள் வரை ஈழத் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட யுத்தம் மிக மோசமானது என குரல் கொடுத்து வருகையில்,

சம்பிரதாயத்திற்கேனும் கவலை வெளிப்படுத்தும் பண்பாடு எங்களிடம் இல்லாமல் போனமை மாபெரும் துரதிர்ஷ்டமே.

ஒரு காதில் தோடு, ரவுசர் முழுவதிலும் வெள்ளிச் சரங்கள், கட்டற்ற சுதந்திரம் எப்படியும் நடக்கலாம்என்ற மிடுக்கு, மற்றவர்கள் பற்றி எந்த நினைப்பும் அற்ற அசாதாரண போக்கு என்ற ஒரு சூழமைபில் எமது இளம் சமூகம் எங்கே போகிறது?

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் உரிமை கோர எவரும் இல்லாத நிலையில் எங்கள் எதிர்காலம் அடையாளம் இல்லாத இனமாக மாறும் சூழ்நிலைக்கு எங்களை இட்டுச்செல்லும் என்பது மட்டுமே நிஜமாகவுள்ளது.

# 50ஆவது அகவையில் பொன்விழா காணும் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்



செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் இன்று தனது 50 ஆவது அகவையில் பொன்விழாக் காண்கிறார்.

சமய, சமூகப்பணிகளில் தன்னை இணைத்துக் கொண்ட இவர் சொல் ஆற்றல் மிக்கவர்.

இவருடைய பேச்சாற்றலும் தமிழறிவும் யாழ். இந்துக்கல்லூரியில் கல்வி கற்றபோது சிவராமலிங்கம் ஆசிரியர், தேவன் மாஸ்ரர் ஆகியோரால் திடமான அத்திவாரம் போட்டுகட்டியெழுப்பட்டன.

இவருடைய ஆரம்பக் கற்பித்தல் சுன்னாகம் திருஞான சம்பந்தரில் அரங்கேறியது. இவருடைய கற்பித்தல் பணி 1994 இல் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தொடர்ந்தது. நாம் நாட்டில் அருகி வரும் நாட்டிய நாடகங்களை வளர்ந்தோங்க வைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு அகில இலங்கை ரீதியாக 1997 இல் நடாத்தப் பட்ட நாடகப் போட்டியில் இவரது பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றமை இவருடைய சிறந்த நெறியாள்கையும் தன்னம்பிக்கையுமே மூல காரணங்களாக அமைந்தன.

இவருடைய இச் சேவையை கௌரவித்து மூன்று முறை நல்லாசிரியர் விருதும் கிடைத்தது. இவருடைய அர்ப்பணிப்பு, திறமை நிறைந்த சேவைகளில் அடுத்த உயர்வாக உபஅதிபராக யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரிக்கே தெரிவானார். தொடர்ந்து இவருடைய வளர்ச்சிப்படிகளில் உன்னத சேவை உயர்ந்த இலட்சியத்தால் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முதல்வரானார்.

இவரது திறமையான பேச்சாற்றலால் ஆலயங்களில் 1987ஆம், 1998 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கதா பிரசங்கங்களை ஆரம்பித்தார். அதில் வந்த பணத்தை ஏழைகளுக்கு அரிசி தானமாக கொடுத்தார். இவருடைய சமூக ஆற்றல் பண்பால் 1995இல் சிவத்தமிழ் செல்வி அன்னையின் அழைப்பில் துர்க்கா தேவஸ்தான நிர்வாக உறுப்பினரானார்.

எம் நாட்டில் இவர் ஆற்றிய சொற்பொழிவின் மகிமை அதன் ஆழக் கருத்துக்கள் மிகவும் அற்புதமானவை. வெளிநாட்டில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் அங்குள்ள ஆலயங்களிலும் இவர் கதாப்பிரசங்கங்கள் செய்ய வேண்டும் என விரும்பி அழைத்தனர். இவருடைய கதாப்பிரசங்கங்கள் 1997 இல் வெளிநாட்டில் ஆரம்பமானது. இந்தியா, சிங்கப்பூர், கனடா, அமெரிக்கா, லண்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள ஆலயங்களில் இவர் ஆற்றிய சொற்பொழிவுகளுக்காக கிடைத்த பணத்தை அறப்பணிக்கு உரமிட்டார்.

இவர் ஆற்றிய பணிகளில், மிக முக்கிய பணிகளாவன, துர்க்கையம்மன் யாத்திரிகள் விடுதியினைத் திறந்ததோடு சிவத்தமிழ் செல்வி சைவத் தமிழ் ஆய்வு நிலையத்திற்கும் அநாதைப்பிள்ளைகள் வளர்ச்சிக்கும் உதவி செய்தார்.

விசேட தேவைக்குரியவர்களது சுன்னாகத்திலுள்ள வாழ்வகத்திற்கு காணிவாங்க பண உதவி வழங்கியதோடு கந்தரோடையில் இளம் விதவைகள் ஐவருக்கும் வீடுகளை வழங்கினார்.

மனவளர்ச்சிக்குறைபாட்டை ஆற்றுப்படுத்தும் நோக்கில் கோண்டாவில் சிவபூமிப்பாடசாலை ஆரம்பித்ததுடன் உறவின்றி தவிக்கும் வயதான முதியோரை வாழவைக்க 2007 இல் சுழிபுரத்தில் சிவபூமி முதியோர் இல்லத்தை ஆரம்பித்தார்.

உடுவில் புற்று நோயாளர் காப்பகத்தை திறந்து வைத்ததோடு யாழ் போதனா வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சைக் கூடத்தையும் திறந்து வைத்தார்.

இவரது சமூகப்பணிகள் எல்லோராலும் போற்றத்தக்கவை. என்றும் இவரது சேவை தொடர வேண்டும்.

அமிர்தலிங்கம் அகன்
கோப்பாய்.

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## கொடுப்பவனாக இருங்கள்



பக்தி, தியானம், ஒழுக்கம் மூன்றாலும் ஒருவன் தெய்வீக ஞானத்தை அடைய முடியும். வாய்மை என்னும் அடித்தளத்தின் மீது இப்பண்புகள் அமையும் போது கடவுளை ஒருவன் உறுதியாக அடைந்து விடுவான்.

உலக வாழ்வு நிரந்தரமானது என்னும் அறியாமை அகன்று விட்டால் பாவம் விலகி விடும். பாவம் நீங்கினால் ஆசை, சுயநலம் மற்றும் அனைத்துத் துயரங்களும் நம்மை விட்டு காணாமல் போகும்.

எப்போதும் கொடுப்பவனாக இருக்கப் பழகுங்கள். அன்பு, உதவி, நல்லெண்ணம், கருணை இவற்றைப் பிறருக்குக் கொடுத்து மகிழுங்கள். பதிலுக்கு பிறரிடமிருந்து எதையும் எதிர்பாராதீர்கள். இறைவன் எப்படி வாரி வழங்குகிறானோ அதுபோல நீங்களும் கொடுத்து வாழுங்கள்.

மனித வாழ்வில் கடமைகள் துரத்துவதும், வருத்துவதும் உண்மையே. வாழ்வில் சுகங்களும் தேவை என்பதை மறுப்பதற்கில்லை. ஏற்ற குறிக்கோளை மறக்காமல், இருளிலும் ஞானஒளியை ஏந்திக் கொண்டு முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம் வந்தே தீரும்.

www.srilankainsurance.com

# மகிழ்ச்சி பொங்கும் வட பிரதேசத்திற்கு
# SLI காத்திடும் துணை

வாழ்நாள் முழுவதும் எதிர்பார்த்திருந்த சுதந்திரத்தினை
தற்போது நிம்மதியாக அனுபவிக்கும் வடபகுதி மக்களின்
வாழ்க்கைக்கு பாதுகாப்பு வழங்கிட
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் தனது புதிய கிளைகளை
2011 மே மாதம் 27 ஆம் திகதி மு.ப 10.18 மணிக்கு
மன்னாரிலும், மே 28 ஆம் திகதி மு.ப 10.27 மணிக்கு
சங்கானையிலும் திறந்து வைக்கின்றது.

**மன்னார் கிளை**
ஸ்டேஷன் வீதி, மன்னார்.

**சங்கானை கிளை**
இல. 45, பொன்னாலை பிரதான வீதி,
சங்கானை.






ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

RAM AAA AA-

# பல்கலைக்கழகத் தெரிவிற்கான வெட்டுப்புள்ளிகள்

| COURSE | JAFFNA | KILINOCHCHI | MANNAR | MULLAITIVU | VAVUNIYA | TRINCOMALEE | BATTICALOA |
|---|---|---|---|---|---|---|---|
| MEDICINE | 1.8366 | 1.4671 | 1.3925 | 0.5950 | 1.8127 | 1.5444 | 1.7438 |
| DENTAL SURGERY | 1.8255 | 1.4107 | 1.3455 | 0.5741 | 1.8089 | 1.5074 | 1.7269 |
| VETERINARY SCIENCE | 1.7282 | 1.0140 | 1.2184 | 0.5504 | 1.7223 | 1.4954 | 1.6453 |
| MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY | 1.7983 | 1.0577 | 1.3086 | 0.5732 | 1.7313 | 1.3713 | 1.7144 |
| AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | 1.6737 | 0.8552 | 1.1257 | 0.4220 | 1.4227 | 1.2272 | 1.4290 |
| AGRICULTURE | 1.1130 | 0.2752 | 0.3554 | 0.1138 | 0.8280 | 0.9656 | 1.0525 |
| FOOD SCIENCE & NUTRITION | 1.6135 | 0.8928 | 1.1125 | 0.5334 | 1.5030 | 1.2960 | 1.5166 |
| FOOD SCIENCE & TECHNOLOGY | 1.7688 | 0.8552 | 0.9217 | 0.5390 | 1.6660 | 1.3594 | 1.6069 |
| BIOLOGICAL SCIENCE | 0.9807 | 0.1861 | 0.1721 | -0.4240 | 0.7060 | 0.8101 | 0.8746 |
| APPLIED SCIENCES (BIO.SC) | 0.9356 | 0.2212 | 0.7800 | -0.1324 | 0.7673 | 1.0295 | 0.8469 |
| ENGINEERING | 1.8217 | 1.0539 | 1.4088 | 0.8469 | 1.5752 | 1.3198 | 1.3874 |
| ENGINEERING (EM) | 1.8005 | 0.9292 | 1.2932 | 0.8371 | 1.4291 | 1.2526 | 1.3842 |
| ENGINEERING (TM) | 1.7450 | 0.9691 | 1.1619 | 0.7098 | 1.4200 | 1.2198 | 1.3468 |
| QUANTITY SURVEYING | 1.7907 | 1.0144 | 1.0647 | 0.6579 | 1.4367 | 1.2727 | 1.3562 |
| COMPUTER SCIENCE | 1.5560 | 0.6069 | 0.7320 | 0.3858 | 1.1523 | 1.1803 | 1.1989 |
| PHYSICAL SCIENCE | 0.9491 | 0.3740 | 0.0171 | -0.2552 | 0.4514 | 0.3362 | 0.4925 |
| SURVEYING SCIENCE | 1.5696 | 0.8328 | 0.9735 | 0.3665 | 1.1958 | 1.0495 | 1.3235 |
| APPLIED SCIENCES (PHY.SC) | 0.9048 | 0.3647 | 0.2697 | -0.2554 | 0.9675 | 0.4943 | 0.8651 |
| MANAGEMENT | 1.2336 | 0.9704 | 1.0643 | 0.7234 | 1.1250 | 1.0128 | 1.1504 |
| ESTATE MANAGEMENT & VALUATION | 1.5418 | 1.2753 | 1.3417 | 1.0402 | 1.5521 | 1.4249 | 1.7131 |
| COMMERCE | 1.2003 | 0.9380 | 1.0182 | 0.6975 | 1.0552 | 0.9649 | 1.1161 |
| PUBLIC MANAGEMENT (SPECIAL) | 1.5947 | 1.3846 | 1.5164 | 1.5422 | 1.6266 | 1.6587 | 1.7980 |
| BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | 1.5577 | 1.2848 | 1.5427 | 0.6339 | 1.6694 | 1.5251 | 1.5793 |
| ARTS * | 1.3966 | 1.3966 | 1.1393 | 1.2895 | 1.3966 | 1.3270 | 1.3966 |
| ARTS (SP) / MASS MEDIA* | 1.2639 | 1.2639 | 1.2639 | 1.2639 | 1.2639 | 1.2639 | 1.2639 |
| ARTS (SP) / PERFORMING ARTS * | 1.0976 | 1.0976 | 1.0976 | 1.0976 | 1.0976 | 1.0976 | 1.0976 |
| ARTS (SAB) - A * | 1.3894 | 1.3894 | 1.3894 | 1.3894 | 1.3894 | 1.3894 | 1.3894 |
| ARTS (SAB) - B * | 1.4719 | 1.4719 | 1.4719 | 1.4719 | 1.4719 | 1.4719 | 1.4719 |
| MANAGEMENT STUDIES (TV) - A | 1.1853 | 0.9485 | 1.0090 | 0.6772 | 1.2028 | 0.9546 | 1.0931 |
| MANAGEMENT STUDIES (TV) - B | 1.3886 | 1.3882 | 1.3010 | 1.2753 | 1.4631 | 1.4662 | 1.4746 |
| ARCHITECTURE | --------- | -------- | ----------- | --------- | --------- | -------- | --------- |
| DESIGN (ARCHITECTURE) | -------- | -------- | ----------- | -------- | -------- | -------- | --------- |
| TOWN & COUNTRY PLANNING | 1.7604 | 0.9028 | 1.0997 | 0.8486 | 1.3900 | 1.6065 | 1.3320 |
| FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT | 0.8868 | --------- | --------- | -------- | 1.2368 | -------- | --------- |
| INFORMATION TECHNOLOGY | 1.7179 | 0.8553 | 0.9435 | 0.5252 | 1.3919 | 1.1046 | 1.1619 |
| INFORMATION TECHNOLOGY & MANAGEMENT | 1.6555 | 1.6523 | 1.5738 | 0.2625 | 1.5621 | 1.5432 | 1.6763 |
| FACILITIES MANAGEMENT | 1.6589 | 0.8053 | 1.3754 | 0.3469 | 1.6146 | 1.5463 | 1.6507 |
| TRANSPORT & LOGISTICS MANAGEMENT | 1.7675 | 0.9231 | 0.9805 | 0.6315 | 1.3800 | 1.2626 | 1.3538 |
| LAW | 1.7760 | 1.7375 | 1.9082 | 1.5616 | 1.6975 | 1.7085 | 1.7971 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY | 1.4817 | --------- | 0.3560 | ------- | 1.3203 | 0.8654 | 0.7798 |
| COMMUNICATION STUDIES * | 1.3701 | 1.3701 | 1.3701 | 1.3701 | 1.3701 | 1.3701 | 1.3701 |
| PEACE & CONFLICT RESOLUTION * | 1.6569 | 1.6569 | 1.6569 | 1.6569 | 1.6569 | 1.6569 | 1.6569 |
| AYURVEDIC MEDICINE & SURGERY | -------- | -------- | ---------- | -------- | ---------- | -0.0943 | --------- |
| UNANI MEDICINE & SURGERY | 1.0445 | 0.0011 | 0.8225 | --------- | 0.8086 | 1.0493 | 1.1091 |
| SIDDHA MEDICINE | 0.8736 | 0.2204 | 0.3177 | 0.2320 | 0.7862 | 0.8225 | 0.8521 |
| INFORMATION & COMMUNICATION TECHNOLOGY | 0.2854 | --------- | -0.1425 | --------- | 1.0170 | 0.4972 | 0.4012 |
| HEALTH PROMOTION | 1.3199 | 0.2582 | 0.3975 | -0.0453 | 1.1632 | 1.0466 | 1.3285 |
| NURSING | 1.3889 | 0.4837 | 0.8756 | -0.0879 | 1.2442 | 1.1335 | 1.2277 |
| PHARMACY | 1.7029 | 0.8303 | 0.9493 | 0.3027 | 1.5681 | 1.2559 | 1.4329 |
| MEDICAL LABORATORY SCIENCES | 1.7269 | 0.8440 | 1.0309 | 0.3534 | 1.6195 | 1.4202 | 1.6177 |
| RADIOGRAPHY | 1.6328 | 0.7147 | 0.8952 | 0.3829 | 1.3969 | 1.3141 | 1.3005 |
| PHYSIOTHERAPY | 1.7917 | 0.8322 | 0.9838 | 0.4676 | 1.6882 | 1.3581 | 1.6954 |
| ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | 1.3755 | 0.3719 | 0.6204 | 0.0279 | 1.0834 | 1.0890 | 1.1858 |
| INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | 1.6451 | 0.6497 | 0.8708 | 0.3217 | 1.1373 | 1.1570 | 1.2411 |
| STATISTICS & OPERATIONS RESEARCH | 1.5903 | 0.8280 | 0.9276 | 0.2570 | 1.1469 | 1.1107 | 1.2563 |
| COMPUTATION & MANAGEMENT | 1.5796 | 0.9777 | 1.4549 | 1.0775 | 1.5701 | 1.6102 | 1.7081 |
| FISHERIES & MARINE SCIENCES | 1.3236 | 0.2207 | 0.8683 | -0.5318 | 1.0803 | 1.0360 | 1.1856 |
| ANIMAL SCIENCE & FISHERIES | 1.4553 | 0.3672 | 0.7768 | 0.3241 | 1.1535 | 1.0514 | 1.2133 |
| FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT | 1.4829 | 0.6175 | 0.6487 | 0.0657 | 1.3481 | 1.1360 | 1.3676 |
| ISLAMIC STUDIES * | 1.2515 | 1.2515 | 1.2515 | 1.2515 | 1.2515 | 1.2515 | 1.2515 |
| ARABIC LANGUAGE * | 0.7730 | 0.7730 | 0.7730 | 0.7730 | 0.7730 | 0.7730 | 0.7730 |
| SCIENCE & TECHNOLOGY | 1.2309 | 0.1292 | 0.4708 | -0.2222 | 1.2080 | 0.7376 | 1.0821 |
| COMPUTER SCIENCE & TECHNOLOGY | 1.3015 | 0.5947 | ---------- | --------- | 1.0209 | -0.0644 | 1.0451 |
| ENTREPRENEURSHIP & MANAGEMENT | 1.2798 | 0.6011 | 1.1918 | --------- | 1.0140 | 1.3023 | 1.2390 |
| ANIMAL SCIENCE | 0.8268 | -0.1243 | 0.4162 | ---------- | 0.6871 | 0.4034 | 0.8213 |
| EXPORT AGRICULTURE | 0.8836 | --------- | 0.0259 | ---------- | 0.6220 | 0.3966 | 0.6021 |
| TEA TECHNOLOGY & VALUE ADDITION | 0.7681 | -0.1994 | 0.0334 | ---------- | -0.1167 | 0.2012 | 0.0845 |
| INDUSTRIAL INFORMATION TECHNOLOGY | 1.3033 | 1.0847 | 0.9849 | -0.1150 | 1.0320 | 1.3166 | 1.1222 |
| MINERAL RESOURCES & TECHNOLOGY | 1.1345 | 0.3738 | 0.5162 | ---------- | 0.7944 | 0.5760 | 1.0250 |
| AQUATIC RESOURCES TECHNOLOGY | 0.8798 | -0.3148 | -0.1431 | ---------- | 0.6658 | 0.2953 | 0.6666 |
| PALM AND LATEX TECHNOLOGY& VALUE ADDITION | 0.4702 | --------- | ---------- | ---------- | 0.1936 | -0.4404 | 0.4552 |
| HOSPITALITY, TOURISM AND EVENTS MANAGEMENT (Uwa Wellassa University) | 1.4372 | 0.3698 | 0.9192 | ---------- | 1.2374 | 1.2616 | 1.4154 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL) | 1.4878 | 1.3840 | 1.5135 | 1.3260 | 1.5334 | 1.4849 | 1.5923 |
| COMPUTING & INFORMATION SYSTEMS | 0.6972 | --------- | --------- - | ---------- | 1.0286 | --------- | -------- |
| PHYSICAL EDUCATION | --------- | --------- | ---------- | ---------- | 0.2619 | 0.9974 | 0.8173 |
| SPORTS SCIENCES & MANAGEMENT | 1.2032 | --------- | ---------- | ---------- | 0.6888 | 1.1789 | -0.6339 |
| SPEECH & HEARING SCIENCES | 1.2258 | 1.2896 | 1.0054 | 1.1339 | 1.0943 | 1.5260 | 1.4419 |
| ART & SCULPTURE(UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | --------- | --------- | ---------- | ---------- | ---------- | ---------- | --------- |
| MUSIC (UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | --------- | ------- - | ---------- | ---------- | ---------- | ---------- | --------- |
| DANCE(UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | --------- | --------- | ---------- | ---------- | ---------- | 0.9181 | --------- |
| DRAMA & THEATRE(UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | -------- | --------- | ---------- | ---------- | ---------- | ---------- | --------- |
| ART & DESIGN(RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | 0.3645 | --------- | ---------- | 0.5918 | ---------- | 0.4211 | 0.0696 |
| MUSIC (RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | 0.0909 | 0.0345 | 0.5358 | 0.4226 | 0.2150 | -0.5284 | 0.2785 |
| DANCE(RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | 0.2343 | 0.2569 | 0.0378 | 0.4416 | -0.0859 | 0.1314 | 0.4496 |
| VISUAL & TECHNOLOGICAL ARTS(SWAMI VIPULANANDA INSTITUTE) | 0.9328 | 0.5402 | 0.5030 | 0.7581 | 0.7219 | 0.9561 | 0.8560 |
| MUSIC(SWAMI VIPULANANDA INSTITUTE) | 0.8569 | 0.7344 | 0.4425 | 0.6481 | 0.5612 | -0.1124 | 0.4343 |
| DANCE(SWAMI VIPULANANDA INSTITUTE) | 0.7997 | 0.8908 | -------- | 0.6147 | 0.6606 | -0.1103 | 0.4499 |
| DRAMA & THEATRE(SWAMI VIPULANANDA INSTITUTE) | 1.3199 | 1.1333 | 1.1078 | 1.0575 | 0.8211 | 0.9063 | 1.2697 |
| TOURISM & HOSPITALITY MANAGEMENT | 1.4725 | 1.3147 | 1.5230 | 1.2570 | 1.5595 | 1.3500 | 1.3828 |

'' நகர சபை, யாழ்ப்பாணம்.



இனிமையான நினைவுகளுக்கு...

GREEDY'S
Hotel & Restaurant



- இந்திய, இலங்கை, சீன உணவு வகைகள்
- AC, NON AC அறைகள் வாடகைக்கு உண்டு
- T.V இலவச இன்டர்நெட் சேவை
- போக்குவரத்து தேவைகளுக்கான வாகன வசதி செய்து தரப்படும்

205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் பில்டிங்)
தொ.பே: 021 2221939, 0776081701, 0778338549

# ஜே.வி.பி. அங்கத்தவர்கள் 7 பேர் கிளிநொச்சியில் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சுவரொட்டி ஒட்டிக்கொண்டிருந்த ஜே.வி.பி. அங்கத்தவர்கள் ஏழு பேர் நேற்று முன்தினம் இரவு இராணுவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அக் கட்சியின் வடக்கிற்கான அமைப்பாளர் ஒருவர் கைதானவர்களில் அடங்குகிறார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, அவசரகாலச் சட்டத்தை நீக்குதல், சரத் பொன்சேகாவை விடுதலை செய்தல் ஆகிய கோரிக்கைகள் அடங்கிய சுவர் ஒட்டிகளை ஜே.வி.பி. அங்கத்தவர்கள் ஒட்டிக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# அழுத்தங்களுக்கு...

நெசர்கீயிடம் இன்னர் சிட்டிபிரஸ் கேள்வி எழுப்பியுள்ள வேளையில் கிமோவின் அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையாகாதுஎனத் தெரிவித்தார். எனினும் இந்த அறிக்கை பயன்படக்கூடியது என்று அவர் தெரிவித்தார்.

இதன் போது குறித்த அறிக்கையின் அடிப்படையில் கிரிகிஸ்தானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவோ அல்லது அங்கு இடம்பெற்ற யுத்தகுற்றங்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளாதா என இன்னர் சிட்டி பிரஸ் கேள்வி எழுப்பியது.

இதே போன்ற செயற்பாட்டினையே இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் தொடர்பிலும் பான் கீ மூன் வெளிப்படுத்தி வருகிறார் என்று இன்னர் சிற்றி பிரஸ் செய்தியாளர் சந்திப்பின் போது சுட்டிக்காட்டியது. (ச-5)

# ஓமந்தை வரை...

தொலைவில் உள்ள ஓமந்தை சிறு நகரில் புதிதாக அம்மக்கப்பட்டுள்ள ரயில் நிலையத்தை போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நேற்றுத் திறந்து வைத்தார்.

கொழும்பிலிருந்து வந்த யாழ். தேவி ரயிலில் ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள புதிய ரயில் நிலையத்தை சென்றடைந்த அமைச்சர் அடுத்த மூன்று வருடங்களில் இந்த ரயில் சேவை யாழ்ப்பாணம் வரையில் நீடிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்திய அரசின் கடன் அடிப்படையிலான நிதியுதவியுடன் இந்திய ரயில்வே நிபுணர்களினால் ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் பாதை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதே போன்று மதவாச்சியிலிருந்து மன்னார் வரையிலான ரயில்பாதையும் அமைக்கப்பட்டு வருகின்றது. (ச-5)

இறைச்சிக் கோழி விற்பனை



CSI

சுத்தம் செய்த நிறை Kg - 420/=
முழுநிறை Kg - 270 /=



வரணி மிஷின் பாம், வரணி
தொடர்புகளுக்கு: 0777715367
(4895)

# அமைச்சர் பீரிஸை...

நபில் அல் அரபியை மட்டுமே சந்தித்துப் பேச முடிந்துள்ளது.

அதேவேளை ரூமேனிய வெளிவிவகார அமைச்சர் டொரு கோஸ்ரியாவை பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தனியாகச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்த இரு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்களுக்கும் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

120 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்கேற்கும் இந்தக் கூட்டத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சரால் இரண்டு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களையே இது வரை சந்திக்க முடிந்துள்ளதானது, பீரிஸ் அங்கும் நெருக்கடியை எதிர் நோக்குவதாக தெரிய வந்துள்ளது.

பெரும்பாலான நாடுகள் இரு தரப்பு, பல தரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும் பொருளாதார, வர்த்தக உறவுகளை பலப்படுத்திக் கொள்வதற்குமே இந்த சந்திப்பில் முன்னுரிமை கொடுத்து வருகின்றன.

ஆனால் இலங்கை தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதால், பல நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸினால் அணுக முடியாதுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# ஐரோ...

தின் மூலம் பல ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துரைக்கவுள்ளது.

யூன் முதலாம் திகதி மாலை ஆரம்பமாகவிருக்கும் இம் மாநாட்டில் போல் மேர்ஃபி உட்பட பல இதர ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

இம் மாநாட்டில் போருக்குப் பின்னர் எவை நடைபெற்றிருக்க வேண்டும் எனவும் நடைபெறாமல் இருக்கும் விடயங்கள் எது எனவும் அலசி ஆராயப்படவுள்ளது.

தமிழ் சொலிடாரிட்டி இயக்கம் பல அமைப்புக்களுடன் இணைந்து இதனை ஒழுங்கு செய்துள்ளது. (ச-5)

## பகுதி நேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக, யாழ். மண்ணில் 45 வருடங்களாக சேவையாற்றி வரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற வாய்ப்பு.

- 2 வார பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள் : யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை, கிளிநொச்சி.

அடிப்படைத் தகைமைகள்:-

- G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18-55 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 05.06.2011ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல.4996
மே/பா , வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை , பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(4996)

## குமரகுரு வாணிபம்

வைகாசித் திருவிழா மலிவு விற்பனை

அன்பிற்கினிய எமது வாடிக்கையாளர்கட்கு,
எதிர்வரும் 30.05.2011 தொடக்கம் 30.06.2011 வரை விசேட சிறப்புக் கழிவு விற்பனையாக ரெடிமேட் ஆடைகளுக்கு இரண்டுக்கு ஒன்று இலவசமாக வழங்கவுள்ளோம். அத்துடன் ஏனைய பொருட்கள் (10,000) பத்தாயிரம் பெறுமதியான கொள்வனவுக்கு உங்கள் அதிர்ஷ்டப் பெட்டியில் இருந்து உங்களால் தெரிவுசெய்யப்படும் பரிசுப் பொருட்கள் உடனுக்குடன் வழங்கவுள்ளோம் என்பதனையும் சித்திரைப் புதுவருடப் பிறப்பிற்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் 20.06.2011 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு குமரகுரு மல்ரிசொப் முன்றலில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு மோட்டார் சைக்கிள்கள் வழங்கவுள்ளோம் என்பதனையும் எமது வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

இச் செய்தியை உங்கள் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவீர்கள் என்றும் நம்புகின்றோம்.

இப்படிக்கு உங்கள் ஆதரவின் கீழ்

குமரகுரு மல்ரிசொப்.
பிரதான வைத்தியசாலை முன்பாக,
A-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

குமரகுரு புடைவையகம்,
A-9 வீதி, கச்சேரி முன்பாக,
கிளிநொச்சி.

விரைவான சேவைக்கு குமரகுரு

(சி-3296)

## உலகளாவிய இந்து சமயத்துறவி வேந்தர் சுவாமி விவேகானந்தரின் எழுச்சி மாநாடு - 30.05.2011



வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் திரு.எஸ்.பத்மநாதன் அவர்கள் தலைமையில் 30.05.2011 காலை 10.00 மணிக்கு நிகழ திருவருள் கைகூடியுள்ளது.

அதிபரின் சிறப்புரையை அடுத்து க.பொ.த. சா/தரத்தில் பயிலும் 425 மாணவர்களுக்கு 'எழுமின்,விழுமின் குறிசாரும் வரை நில்லாது செல்மின்' கண்காட்சி இடம்பெறும்.

செயலாளர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை

(C-3303)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.